2017 - இதழ் 09

இலவசம்

# உள்ளான மனிதன்



GRACE TABERNACLE

APOSTOLIC CHURCH

# உள்ளான மனிதன்

மாதாந்த சஞ்சிகை - இலவசம்

## இயேசு சொன்னார்:

**வருத்தப்பட்டுப் பாரஞ்சுமக்கிறவர்களே! நீங்கள் எல்லாரும் என்னிடத்தில் வாருங்கள்; நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன்.**

உள்ளூர் சபையின் தொடர்புகளுக்கு

LOCAL CHURCH CONTACT INFORMATION

நீங்கள் தற்போது கிறிஸ்தவ ஆவிக்குரிய ஐக்கியமொன்றிலே இணைந்திருந்தால், அங்கே கருத்தோடு தேவனை சேவித்து, உங்கள் அழைப்பையும் தெரிந்து கொள்ளுதலையும் உறுதிப்படுத்தி, இயேசு கிறிஸ்துவுக்குள், உங்களைக் குறித்ததான பிதாவின் சித்தத்தை நிறைவேற்றுங்கள்.

# இந்த இதழில்...

2017 - இதழ் 09


## 3 சொல்லும் செயலும்

அநேகர் தங்கள் கடந்த கால தவறான செய்கைகளை நினைத்து மனம் வருந்துகின்றவர்களாய் இருக்கின் றார்கள். ஆயினும் அவர்களுக்கு மனம் திரும்ப விரு ப்பமில்லை

## 5 காவல்

வேத பிரமாணங்களுக்கு முரணான காரியங்களை தங்கள் வாழ்வில் அனுமதிப்பதால், தங்கள் இருதய த்தில் மாம்ச இச்சைகளை நிறைவேற்றும் ஆசை களை ஒரு பக்கத்திலே வைத்து வைக்கின்றார்கள்.

## 10 பிரசங்கக் குறிப்புகள்

ஒரு மனிதன் தேவனை கனப்பண்ணுகின்றவனாயிரு ந்தால், அவனுடைய வாழ்வில் தேவனுடைய வசன த்தைக் கேட்கும் போது விவாதம் செய்ய மாட்டான். எப்போதும் வேத பிரமாணங்களை மனதில் வைத்திரு ப்பான்.

## 13 புதிய நாளுக்குள்...

கர்த்தருடைய வேதத்தில் பிரியமாயிருந்து இரவும் பகலும் அவருடைய வேதத்தில் தியானமாயிருக்கிற மனுஷன் பாக்கியவான்.



**கிறேஸ் (ற்)ரபனக்கல்**

**210 Silver Star Blvd., Unit #807**
**Scarborough, ON M1V 5J9 Canada**

☎ 416.613.2909 info@gtachurchnet.ca

# சொல்லும் செயலும்

*போதகர் ரஞ்சிற் கொன்ஸ்ரன்ரைன்*

சொல்லுக்கு செயல் ஏற்புடையதாயிருக்க வேண்டும். அவ்வாறு இல்லாத பட்சத்தில் அதை பேசுகின்றவரை மனிதர்கள் மதிப்பதில்லை. கர்த்தராகிய இயேசு கிறிஸ்து கூறிய படிப்பினைகளில், ஒரு மனுஷனுக்கு இரண்டு குமாரர் இருந்தார்கள், மூத்தவனிடத்தில் அவன் வந்து: மகனே நீ போய் இன்றைக்கு என் திராட்சத்தோட்டத்தில் வேலைசெய் என்றான். அதற்கு அவன்: மாட்டேன் என்றான், ஆகிலும், பின்பு அவன் மனஸ்தாபப்பட்டுப் போனான்.

இளையவனிடத்திலும் அவன் வந்து, அப்படியே சொன்னான், அதற்கு அவன்: போகிறேன் ஐயா, என்று சொல்லியும், போகவில்லை. இவ்விருவரில் எவன் தகப்பனுடைய சித்தத்தின்படி செய்தவன் என்று கேட்டார், அதற்கு அவர்கள்: மூத்தவன்தான் என்றார்கள். ஆம், சொல்லுக்கு செயல் ஏற்புடையதாயிருக்க வேண்டும். அல்லாது போனால் சொல்லானது பொருளிழந்து போய்விடும்.

இயேசு கிறிஸ்து மேலும் ஒரு உவமையிலே, ஒரு மனுஷனுக்கு இரண்டு குமாரர் இருந்தார்கள். அவர்களில் இளையவன் தகப்பனை நோக்கி: தகப்பனே, ஆஸ்தியில் எனக்கு வரும் பங்கை எனக்குத் தர வேண்டும் என்றான். அந்தப்படி அவன் அவர்களுக்குத் தன் ஆஸ்தியைப் பங்கிட்டுக்கொடுத்தான். சில நாளைக்குப்பின்பு, இளையமகன் எல்லாவற்றையும் சேர்த்துக்கொண்டு, தூரதேசத்துக்குப் புறப்பட்டுப் போய், அங்கே துன்மார்க்கமாய் ஜீவனம்பண்ணி, தன் ஆஸ்தியை அழி-த்துப்போட்டான்.

**எல்லாவற்றையும் அவன் செலவழித்தபின்பு, அந்தத் தேசத்திலே கொடிய பஞ்சமுண்டாயிற்று. அப்பொழுது அவன் குறைவுபடத்தொடங்கி, அந்தத் தேசத்துக் குடிகளில் ஒருவனிடத்தில் போய் ஒட்டிக்கொண்டான்.**

அந்தக் குடியானவன் அவனைத் தன் வயல்களில் பன்றிகளை மேய்க்கும்படி அனுப்பினான். அப்பொழுது பன்றிகள் தின்கிற தவிட்டினாலே தன் வயிற்றை நிரப்ப ஆசையாயிருந்தான், ஒருவனும் அதை அவனுக்குக் கொடுக்கவில்லை.

அவனுக்குப் புத்தி தெளிந்தபோது, அவன்: என் தகப்பனுடைய கூலி க்காரர் எத்தனையோ பேருக்குப் பூர்த்தியான சாப்பாடு இருக்கிறது, நானோ பசியினால் சாகிறேன். நான் எழுந்து, என் தகப்பனிடத்திற்குப் போய்: தகப்பனே, பரத்துக்கு விரோதமாகவும் உமக்கு முன்பாகவும் பாவஞ்செய்தேன். இனிமேல் உம்முடைய குமாரன் என்று சொல்ல ப்படுவதற்கு நான் பாத்திரனல்ல, உம்முடைய கூலிக்காரரில் ஒருவனாக என்னை வைத்துக்கொள்ளும் என்பேன் என்று சொல்லி, எழுந்து புறப் பட்டு, தன் தகப்பனிடத்தில் வந்தான்.

அவன் தூரத்தில் வரும்போதே, அவனுடைய தகப்பன் அவனைக் கண்டு, மனதுருகி, ஓடி அவன் கழுத்தைக் கட்டிக்கொண்டு, அவனை முத்தஞ்செய்தான். குமாரன் தகப்பனை நோக்கி: தகப்பனே, பரத்துக்கு விரோதமாகவும், உமக்கு முன்பாகவும் பாவஞ்செய்தேன், இனிமேல் உம்முடைய குமாரன் என்று சொல்லப்படுவதற்கு நான் பாத்திரன் அல்ல என்று சொன்னான்.

இளைய குமாரன் புத்தி தெளிந்தபோது மனம் வருந்தினான், நல்வ ழியைத் தீர்மானித்தான். அதை நிறைவேற்றினான். கர்த்தர் மேற்குறிப் பிட்ட உவமையில் மனம் திரும்புதலைக் குறித்து கூறினார். ஒருவன் மனம் வருந்தியும் மனம் திரும்பாது போனல் அவனது மனம் வருந்து தலினால் அவனுக்கு இலாபம் என்ன? அவன் மனம் திரும்பாத பட்ச த்தில் அவன் கூறும் மன வருத்தமானது வெறும் சொல்லாகவே இருக் கும். மனந்திரும்புதல் இல்லாத மனவருத்தமானது சக்கரமில்லாத வண் டியைப் போன்றது. வண்டி என்று அழைக்கப்பட்டாலும் அதனால் பிரயோசனம் இல்லை.

அநேகர் தங்கள் கடந்த கால தவறான செய்கைகளை நினைத்து மனம் வருந்துகின்றவர்களாய் இருக்கின்றார்கள். ஆயினும் அவர்களு க்கு மனம் திரும்ப விருப்பமில்லை.

பிரியமான சகோதரனே சகோதரியே உன் வாழ்க்கையிலே உனக்கு நன்மையுண்டாக உனது சொல்லும் செயலும் தேவனுக்கேற்றதாயிருக்க வேண்டும். உனது தீர்மானம் செயலிலே காணும்படி இன்றே நீ தேவனண்டையிலே வரும்படியாய், இயேசுவே எனது வாழ்வில் வாரும், என்னை உமது பிள்ளையாய் எற்றுக்கொள்ளும் என்று கூறுவாயாக. உன் தீர்மானமானது உன் செயலிலே விளங்குவதாக.

இயேசு மனந்திரும்புகிற ஒரே பாவியினிமித்தம் பரலோகத்தில் மிகுந்த சந்தோஷம் உண்டாயிருக்கும் என்றார்

**கிருபையின் கூடார அப்போஸ்தல சபை**

**ரொரன்ரோ, கனடா ☎ 416.613.2909**

# காவல்

மகளின் திருமணநாள் நெருங்கிக்கொண்டிருப்பதால் வீடு விழாக் கோலம் பூண்டது. தந்தையின் பரவசத்திற்கு அளவில்லை. பல ஆண்டுகளுக்கு முன்பாக நடந்த மனதிற்கினிய நினைவலைகள் அவர் மனதில் ஓடிக் கொண்டிருந்தது. குழந்தையாக மடியில் தவழ்ந்து திரிந்த நாட்களையும், சிறுமியாக தோளில் ஏறி விளையாடிய நாட்களையும் கடந்து இப்போது மணமகளாகும் பருவத்தை அடைந்திருக்கின்றாள் என்பதை நம்பவே முடியவில்லை. உயர் மதிப்புள்ள சமுக வலை யத்திற்குள் அமைந்திருந்த வீட்டிற்குள், குறிப்பிட்ட சிலருக்கே அந்த வீட்டிற்குள் செல்லும் சிலாக்கியம் கிடைத்தது. ஆனால் திருமண ஆயத்தத்தின் பரபரப்புக்கள் மத்தியில், வீட்டின் வளவை சுத்தப்படுத்தி அலங்கரிப்ப திலிருந்து, உள்ளே நடக்கும் திருத்த வேலைகளுக்காக பலர் அனுமதி க்கப்பட்டிருந்தார்கள். திருமண பரவசத்தில் மூழ்கியிருந்த தந்தையார், யார் உள்ளே சென்று வருகின்றார்கள் என்ற கவனத்தை மறந்து போனார். பலரும் பார்த்து ஆச்சரியப்படத்தக்கதாக திருமணம் மிகவும் சிறப்பாக நடை பெற்றது.

திருமணம் முடிந்து ஒரு மாதத்திற்குள், அந்த வீட்டிற்குள் இருந்த பல விலையுயர்ந்த பொருட்கள் கொள்ளையடிக்கப்பட்டது. திருமண ஆர-வாரத்தில், பாதுகாப்பு நெறிமுறைகள் (Security Protocol) தணிக்கப்ப ட்டதால், வீட்டினுள்ளே திருத்த வேலைக்கு வந்து சென்றவர்கள், வீட்டிற்குள் இருக்கும் பொருட்களையும், வீட்டிற்குள் நுழையும் வழி யையும், தகுந்த சந்தர்ப்பத்தையும் அறிந்து கொண்டார்கள் என்பதை உணர்ந்த அந்த தந்தையார் மனம் வருந்தினார்.

**திருடர்கள் அந்த வீட்டிற்குள் நுழைந்ததால் அந்த வீடு பாதுகாப்பு நெறிமுறைகள் தளர்ந்து போகவில்லை, மாறாக வீட்டில் பாதுகாப்பு நெறிமுறைகள் தளர்த்தப்பட்டதாலேயே திருடர் -கள் வீட்டிற்குள் நுழைந்தார்கள்.**

பொதுவாக மனிதர்களுடைய வாழ்க்கையில் முக்கியமான நிகழ்வுகள் நடக்கும் போது, அவர்கள் தாங்கள் யார் என்பதை மறந்து, வாழ்க் கையின் நெறிமுறைகளை தளர்த்தி விடுகின்றார்கள். “**இது வாழ்க்கை யில் ஒரு முறை நடைபெறும் சம்பவம், ஒரே ஒரு நாளில் இப்படி செய்தால் என்ன**” என்று கூறி பல காரியங்களில் சமரசம் செய்து

விடுகின்றார்கள். வாழ்நாள் முழுவதும் சகல காவலோடும் காத்து வந்த நன்மதிப்பை ஒரே நாளில் முற்றாக குலைத்துவிடு கின்றார்கள். பல மாதங்களாக கடுமையாக கல்வி கற்று, பரீட்சையின் நாளை அசட்டை செய்கின்றவர்கள் போல இருக்கின்றார்கள். கிறிஸ்துவை சார்ந்து வாழும் வாழ்க்கையிலும், உலகத்தின் இச்சைகள் இருதயத்தில் நுழைந்து விட்டதால் தேவ காரியங்கள் அற்றுப் போவதில்லை. மாறாக தேவ காரியங்களை அசட்டை பண்ணி, அவைகளை விட்டுவிடுவ தாலேயே உலகத்தின் இச்சைகள் இருதயத்தில் ஒட்டிக் கொள்கின்றது. கர்த்தரே ஆவியானவர் கர்த்தருடைய ஆவி எங்கேயோ அங்கே விடுதலையுமுண்டு என்று பரிசுத்த வேதாகமத்திலே வாசிக்கின்றோம். எனவே எங்கள் இருதயம் தேவன் தங்கும் ஆலயமாக இருந்தால், எம்மை பிசாசானவன் மேற்கொள்ள முடியாது.

பிசாசானவன், எங்கள் வாழ்க்கையில் உள்ளிட்டு, எங்கள் சமாதானத்தை கெடுக்கும்படியான சந்தர்ப்பத்தை ஆவலுடன் காத்திருக்கின்றான்.

**சுவரில் ஏற்படும் சின்ன வெடிப்பு பெரிதாகி, பின்பு அந்த சுவர் பிளந்து போவதுபோல, எங்கள் வாழ்க்கையில் ஏற்படும் சின்ன விரிசலை பெரும் பிளவாக மாற்றி விடுகின்றான்.**

தெளிந்த புத்தியுள்ளவர்களாயிருங்கள், விழித்திருங்கள் ஏனெனில், உங்கள் எதிராளியாகிய பிசாசானவன் கெர்ச்சிக்கிற சிங்கம்போல் எவனை விழுங்கலாமோ என்று வகைதேடிச் சுற்றித்திரிகிறான். விசுவாசத்தில் உறுதியாயிருந்து, அவனுக்கு எதிர்த்து நில்லுங்கள் உலகத்திலுள்ள உங்கள் சகோதரரிடத்திலே அப்படிப்பட்ட பாடுகள் நிறைவேறிவருகிறதென்று அறிந்திருக்கிறீர்களே. கிறிஸ்து இயேசுவுக்குள் நம்மைத் தமது நித்திய மகிமைக்கு அழைத்தவராயிருக்கிற சகல கிருபையும் பொருந்திய தேவன் தாமே கொஞ்சக்காலம் பாடநுபவிக்கிற உங்களைச் சீர்ப்படுத்தி, ஸ்திரப்படுத்தி, பலப்படுத்தி, நிலைநிறுத்துவாராக.

சில குடும்பங்களிலே, விசேஷித்த நாட்கள் வரும் போது, தாங்கள் விட்டு வந்த, வேத பிரமாணங்களுக்கு அப்பாற்பட்ட, பாரம்பரியங்களை நிறைவேற்றும் வண்ணமாக, சபைப் போதகரையும், விசுவாசக்குடும்பங்களையும் தவிர்த்துக் கொள்கின்றார்கள். போதகரும் விசுவாசக் குடும்பங்களையும் தவிர்த்து சமார்த்தியமாக கொண்டாட்டங்களை முடித்து விட்டோம் என்ற திருப்தி இவர்களுக்கு ஏற்படுகின்றது. இப்படியாக தங்கள் சொந்த பந்தங்களை திருப்தியாக்குகின்றார்கள்.

அதே வேளையில் விசுவாசக் குடும்பங்கள் இதை அறியாதபடியால், அவர்களும், இந்த குடும்ப விவகாரங்களைக் குறித்து திருப்தியாக இருப்பார்கள் எனவும் எண்ணுகின்றார்கள். இப்படியாக மனிதர்களை திருப்திப் படுத்துவதால் பலன் என்ன? மனிதர்களுக்கு பயப்படுவதால் இலாபம் என்ன? பரலோகத்திலுள்ள தேவன் யாவற்றையும் அறிவார். அவருடைய பார்வைக்கு விலகி எங்கே ஓட முடியும்?

இப்படியாக, மனிதர்களை திருப்திப்படுத்த விரும்புகின்றவர்கள் தங்கள் வீட்டிற்கு திருடர்கள் நுழையும்படியாய் ஒரு கதவை போட்டு, அந்த கதவின் திறப்பை திருடர்களுக்கு கொடுத்து வைக்கின்றவர்களுக்கு ஒப்பாயிருக்கின்றார்கள். அந்த வீட்டிற்கு திருடர்கள் போக்கும் வரத்து-மாக இருப்பார்கள். வேத பிரமாணங்களுக்கு முரணான காரியங்களை தங்கள் வாழ்வில் அனுமதிப்பதால், தங்கள் இருதயத்தில் மாம்ச இச்சைகளை நிறைவேற்றும் ஆசைகளை ஒரு பக்கத்திலே வைத்து வைக்கின்றார்கள். அதனால் இவர்களுடைய இருதயத்தில் பிசாசான வனுக்கு ஒரு கதவை அமைத்து கொடுக்கின்றவர்களாயிருக்கின்றார்கள். அவன் இப்படிப்பட்டவர்களுடைய வாழ்வில் போக்கும் வரத்துமாக இருப்பான்.

## திருடன் திருடவும் கொல்லவும் அழிக்கவும் வருகிறானேயன்றி வேறொன்றுக்கும் வரான். என்று இயேசு கூறினார்.

அதாவது திருடனாகிய பிசாசானவன் எங்கள் வாழ்க்கையை கெடுத்து அழிக்கும்படியாகவே வருகின்றான். ஆனால் கர்த்தராகிய இயேசு வாழ்வில் சமாதானம் தரும்படியாக அழைக்கின்றார்.

என் மகனே, என் வார்த்தைகளைக் கவனி என் வசனங்களுக்கு உன் செவியைச் சாய். அவைகள் உன் கண்களை விட்டுப்பிரியாதிருப்பதாக. அவைகளை உன் இருதயத்துக்குள்ளே காத்துக்கொள். அவைகளைக் கண்டுபிடிக்கிறவர்களுக்கு அவைகள் ஜீவனும், அவர்கள் உடலுக் கெல்லாம் ஆரோக்கியமுமாம். எல்லாக் காவலோடும் உன் இருதயத் தைக் காத்துக்கொள், அதினிடத்தினின்று ஜீவஊற்று புறப்படும். வாயின் தாறுமாறுகளை உன்னை விட்டகற்றி, உதடுகளின் மாறுபாட்டை உனக் குத் தூரப்படுத்து. உன் கண்கள் நேராய் நோக்கக்கடவது. உன் கண் -ணிமைகள் உனக்கு முன்னே செவ்வையாய்ப் பார்க்கக்கடவது. உன் கால் நடையைச் சீர்தூக்கிப்பார் உன் வழிகளெல்லாம் நிலைவரப்பட் டிருப்பதாக. வலதுபுறமாவது இடதுப்புறமாவது சாயாதே. உன் காலைத்

தீமைக்கு விலக்குவாயாக. என்ற அறிவுரையானது பரிசுத்த வேதாக மத்தில் கூறப்பட்டிருக்கின்றது. (நீதிமொழிகள் 4:20-27)

# எங்களை அழைத்த தேவன், எங்கள் பாவங்களை மன்னித்து, திருஇரத்தத்தால் கழுவினார். எங்களுக்கு இரட்சிப்பைத் தந்தார்.

இந்த பூமியிலே பரிசுத்த வாழ்க்கை வாழ்ந்து, இயேசு கிறிஸ்துவுக்குள், பிதாவின் சித்தத்தை நிறைவேற்றும்படியாய், பரிசுத்தாவியானவரின் வழிநடத்தலை தந்திருக்கின்றார். இவற்றுள் பல வரங்களும் ஆசீர்வாத ங்களும் அடங்கி இருக்கின்றது. இயேசு கிறிஸ்துவுக்குள் தங்கள் வாழ் க்கையை காத்துக் கொள்ளுபவர்கள்

1. நாள்தோறும் பரிசுத்த வேதாகமத்தை கருத்தோடு வாசிப் பார்கள்
2. கருத்தோடு வேதாகமத்தை வாசிப்பவர்கள் தினமும் ஊக் -கமாக ஜெபிப்பார்கள்
3. இவர்கள் சபை ஐக்கியத்தில் ஆரோக்கியமான அங்கத்த வர்களாக இருப்பார்கள்.

நான் ஆலயத்திற்கு சென்று வருகின்றேன், ஆனால் வேத வாசிப்பும் ஜெபமும் இல்லை அல்லது நான் வேதாகமத்தை வாசிக்கின்றேன் ஆனால் ஜெபமும் சபை கூடுதலும் என்னிடத்தில் குறைவு அல்லது நான் ஜெபிக்கின்றேன் ஆனால் வேத வாசிப்பும் சபை கூடுதலிலும் குறைவாய் இருக்கின்றேன் என்று இவைகளை வேறு பிரித்து கூற முடியாது.

கருத்தோடு வேதத்தை வாசிப்பவர்கள் ஊக்கமாக ஜெபிப்பார்கள், வாஞ்சையோடு சபைக்கு செல்வார்கள். ஊக்கமாக ஜெபிக்கிறவர்கள், கருத்தோடு வேதத்தை வாசிப்பார்கள், சபை ஐக்கியத்தை குறித்த வாஞ்சை இவர்கள் வாழ்வில் இருக்கும். தேவனை ஆராதிக்கும்படியாய் வாஞ்சையோடு சபை ஐக்கியத்திற்கு செல்கின்றவர்கள் கருத்தோடு வேதத்தை வாசிப்பார்கள், ஊக்கமாக ஜெபிப்பார்கள்.

தவிர்க்கமுடியாத சூழ்நிலைகள் இவர்கள் வாழ்வில் ஏற்பட்டாலும், சில வேளைகளில் இவைகளை செய்ய முடியாத நிலைக்கு தள்ளப்பட் டாலும், இவைகளை குறித்து வாஞ்சை இவர்கள் இருதயத்தில் எப்போ தும் இருக்கும். இவைகள் எங்கள் வாழ்வில் குறைவடையும் போது எங்

-கள் வாழ்க்கையில் தேவனோடுள்ள உறவு குறைவடைவதால், எங்கள் இரு தயத்தில் குறைவு இருக்கும், இதனால் முறுமுறுப்பு எங்கள் வாழ்க் கையில் இருக்கும். மற்றவர்களை குறித்து விரோதமாய் பேசுவதும், மனம் திருப்தியடையாதபடியால், எண்ணமெல்லாம் குறைவை பார்ப்ப தாகவே இருக்கும். சுத்தமுள்ளவர்களுக்குச் சகலமும் சுத்தமாயிரு க்கும் அசுத்தமுள்ளவர்களுக்கும் அவிசுவாசமுள்ளவர்களுக்கும் ஒன்றும் சுத்தமாயிராது. அவர்களுடைய புத்தியும் மனச்சாட்சியும் அசுத்தமா யிருக்கும். (தீத்து 1:15)

**தேவனுடைய நிறைவு எங்கள் இருதய-த்திலே வரும் போது, வாழ்க்கையில் எதிரிடையான சூழ்நிலையிலும் கர்த்தராகிய இயேசு கிறி ஸ்துவின் பூரண சமாதானம் தங்கும்.**

முறுமுறுப்புகள் அகன்று போகும், குறைகள் ஏற்பட்டாலும், கிறிஸ்துவு க்குள் அதை நிறைவாக்கும் வழிகளை தேடுபவர்களாயிருப்போம். போதும் என்கிற மனம் இருக்கும். தேவனோடுள்ள உறவு நிறைவாய் இருப்பதனால் வேத வாக்கியம் கூறுவது போல "என் தேவன் தம்மு டைய ஐசுவரியத்தின்படி உங்கள் குறைவையெல்லாம் கிறிஸ்து இயேசு வுக்குள் மகிமையிலே நிறைவாக்குவார்." (பிலிப்பியர் 4:19)

பிரியமானவர்களே, எங்கள் பெலவீனங்களை மேற்கொள்ள தேவன் எங் களுக்கு பரிசுத்த ஆவியானவரின் வழிநடத்துதலை தருகின்றார். தேவ னோடுள்ள உறவில் பெலப்படுங்கள். கருத்தோடு வேதத்தை வாசிக்க ஆரம்பியுங்கள். ஊக்கமாக ஜெபியுங்கள், வாஞ்சையோடு, ஆலயத்தி ற்கு சென்று தேவனை ஆராதியுங்கள், திருவசனத்தை கேளுங்கள். கேட்கிறவர்களாய் மட்டுமல்ல, அதன்படி செய்கிறவர்களாய் மாறுங்கள். இவைகளை மனதார செய்கின்றவர்கள், தங்களைக் குறித்ததான பிதா -வின் சித்தத்தை அறிந்து, கிறிஸ்துவுக்குள் அந்த சித்தத்தை தங்கள் வாழ்க்கையில் நிறைவேற்றுகின்றவர்களாக இருப்பார்கள். இவர்கள் எல்லாக் காவலோடும் தங்கள் இருதயத்தை காத்துக் கொள்வதால், திருடனாகிய பிசாசானவனுக்கு அவர்கள் இருதயத்தில் இடம் இல்லை. இவர்கள் இருதயம் எப்போதும் தேவன் தங்கும் ஆலயமாயிருக்கும்.

**கர்த்தராகிய இயேசு கிறிஸ்துதாமே உங்களை வழிநடத்துவாராக! ஆமேன்.**

# கபடற்றவர்கள்

**பிரசங்கக் குறிப்புக்கள்** - போதகர் ரஞ்சிற் கொன்ஸ்ரன்ரைன்

**[IF YOU WOULD LIKE TO LISTEN TO THE FULL VERSION OF THIS MESSAGE IN ENGLISH OR TAMIL, FOLLOW THE LINK THAT IS PROVIDED AT THE END THIS SERMON NOTES]**

## பிரதான வசனம் : யோவான் 1:45-49

என்னுடைய வாழ்க்கை இப்படியாக இருக்கின்றது ஆனால் என்னுடைய பிள்ளை நன்றாக படித்து உழைத்து சிறப்பாக வாழ வேண்டும் என்றே பெற்றோர்கள் விரும்புகின்றார்கள். இது ஒரு நல்ல எண்ணம். ஆனால் நான் எப்படியும் வாழ்வேன், என்னுடைய பிள்ளை எப்படியாவது பரலோகத்திற்கு போகட்டும் என்பது ஏற்புடையதல்ல. நான் கள்வனாக இருக்கின்றேன், எனவே நீயும் கள்வனாக வரத்தேவை யில்லை என பிள்ளையை அடிப்பதை விட்டுவிட்டு, பிள்ளை நடக்க வேண்டிய வழியை பெற்றோர் தங்கள் வாழ்க்கையில் சாட்சியாக காண் பிக்க வேண்டும். ஏனெனில் பிள்ளைகள் பெற்றோரைப் பார்த்தே தங்கள் வழிகளை கற்றுக் கொள்கின்றார்கள்.

எத்தனை பேர் வேதாகமத்தை தினமும் வாசிக்கின்றீர்கள்? எத்தனை பேர் குடும்ப ஜெபம் தினமும் செய்து வருகின்றீர்கள்? குடும்பமாக கூடி பலவிடயங்களை மனிதர்கள் செய்து கொள்கின்றார்கள். ஆனால் குடு ம்ப ஜெபம் செய்யுங்கள் என்று சொல்லும் போது, அது எங்கள் குடும் பத்தில் சாத்தியப்படாது என, கணவன் மனைவியையும், மனைவி கண வனையும், மற்றும் பல காரணங்களையும் சுட்டிக் காட்டுகின்றார்கள். இவைகளின் அடிப்படைக் காரணி என்னவென்றால், இப்படிப்பட்வர்க ளுக்கு தினமும் குடும்ப ஜெபம் செய்ய மனதில்லை. நாங்கள் தேவனு டைய வார்த்தைகளை அநேகந்தரம் கேட்டும், எங்கள் வாழ்க்கையில் அந்த வார்த்தை பலன் கொடுக்காமல் போகுமாயில், எங்கள் இருதயம் பலன் தரும் நல்ல நிலம் அல்லவே. சிலர் வார்த்தைகளை கேட்கின் றார்கள், அவற்றை தங்கள் மனதில் எடுத்து ஆராய்கின்றார்கள். அதா வது இவர் என்ன சொல்கின்றார்? இந்த வார்த்தையை கூறுகின்றாரே, இவர் எப்படித் தான் செய்கின்றாரோ? என்று தங்கள் மனதிலே பெரும் ஆராய்ச்சிகளை செய்கின்றார்கள். ஆனால் அந்த வார்த்தைகளை அவர்கள் தங்கள் இருதயத்தில் திறந்து கொடுத்து, அதன்படி நடந்தால் மட்டுமே, அந்த வார்த்தை அவர்கள் வாழ்வில் பலன் கொடுக்கும். இன்று எங்கள் இருதயம் எப்படி இருக்கின்றது? உங்கள் இருதயதம் நல்ல நிலம் இல்லாவிட்டால் அதை எப்படி கூறுவது?

பிலிப்பு என்னும் மனிதன் இயேசுவை கண்டபின்பு, நாத்தான்வேலிடம் வந்து: நியாயப்பிரமாணத்திலே மோசேயும் தீர்க்கதரிசிகளும் எழுதியிருக்கிறவரைக் கண்டோம் அவர் யோசேப்பின் குமாரனும்

நாசரேத்தூரானுமாகிய இயேசுவே என்றான். அதற்கு நாத்தான்வேல்: நாசரேத்திலிருந்து யாதொரு நன்மை உண்டாகக்கூடுமா என்றான். அதற்குப் பிலிப்பு: வந்து பார் என்றான். அப்படி கூறியபோது நாத்தான் வேல் அலட்சியம் பண்ணாமல் அவன் கால தாமதமின்றி வந்து இயேசுவைப் பார்த்தான். ஏனெனில் அவன் மெசியாவை உண்மை யான மனதுடன் எதிர்பார்த்துக் கொண்டிருந்தான். தேவனுடைய ராஜ் யம் வரக் காத்திருந்தான். இயேசு நாத்தான்வேலைத் தம்மிடத்தில் வர க்கண்டு அவனைக்குறித்து: இதோ, கபடற்ற உத்தம இஸ்ரவேலன் என்றார். ஒரு இஸ்ரவேலன் எப்படி இருக்க வேண்டுமோ அப்படியாக நாத்தான்வேல் வாழ்ந்து வந்தான். அவனுடைய உத்தம உள்ளத்தை தேவன் அறிந்திருந்தார்.

இன்றைய நாட்களிலே, தேவனாலே அழைக்கப்பட்டவர்கள் கூட, சில தேவ காரியங்களை குறித்து பேச மனதில்லாமல் அவற்றை தவிர்த்துக் கொள்கின்றார்கள். ஏனெனில் அவர்கள் வாழ்க்கையில் உலக காரிய ங்களுக்கு இடம் உண்டு. பாவமான காரியங்களை நிறைவேற்றுவதற்கு ஒரு போர்வையை தேடிக் கொள்கின்றார்கள். உலகப் போக்கான, வேத பிரமாணங்களுக்கு அப்பாற்பட்ட காரியங்களை செய்ய வேண்டும் என்ற ஆசை அவர்கள் உள்ளத்தில் இருப்பதனால், அதை குற்ற உணர்வில்லாமல் செய்யும்படி, அவற்றை ஆராதனை ஸ்தலங்களுக்குள் கொண்டு வருகின்றார்கள்.

கர்த்தர் இந்த பூமியிலே வாழ்ந்த நாட்களில் இருந்த பரிசேயர், வேத பாரகர்கள் பலர் இப்படியாகவே இருந்தார்கள். தேவ காரியங்களில் தேறினவர்கள் என்ற பெயரைப் பெற்று, வேதபிரமாணங்களுக்கு அப்பாற் பட்ட காரியங்களையே செய்து வந்தார்கள். காலநிலை வானிலை-களை நிதானித்து எப்போது மழை வரும், எப்போது காற்றடிக்கும் என்று கூற உங்களால் முடிகின்றது ஆனால் வேத பிரமாணங்களை அறிந்த உங்களுக்கு தேவனுடைய காரியங்களையும் நேரங்களையும் நிதானிக்க முடியாமல் இருக்கின்றதென்ன என இயேசு அவர்களுக்கு கூறினார்.

ஒரு மனிதன் தேவனை கனப்பண்ணுகின்றவனாயிருந்தால், அவனுடைய வாழ்வில் தேவனுடைய வசனத்தைக் கேட்கும் போது விவாதம் செய்ய மாட்டான். எப்போதும் வேத பிரமாணங்களை மனதில் வைத்திருப்பான். நாத்தான்வேல் உத்தம கபடற்ற இஸ்ரவேலனாய் இருந்தது போல நாங்களும் உத்தம கபடற்ற இருதயம் உள்ளவர்களாக மெசியாவைக் காண வாஞ்சையுள்ளவர்களாக இருக்க வேண்டும்.

[இந்த தேவ செய்தியின் முழுமையான ஒலிப்பதிவை எங்கள்
இணையத் தளத்தில் (INTERNET WEBSITE இல்)
தமிழ் ஆங்கில மொழிகளில் கேட்கலாம்.]

உள்ளான மனிதன்

# புதிய நாளுக்குள்...

அனுதின தியானக் குறிப்புகள்

பரிசுத்த வேதாகமத்திலே குறிப்பிடப்பட்ட வசனங்களை மையமாக கொண்டு, இலகு மொழி நடையில், சுருக்கமான கட்டுரைகளாக, இந்த தியானக் குறிப்புக்களை உங்களுக்கு சமர்ப்பிக்கின்றோம். “**என்னோடு சேர்க்காதவன் சிதறடிக்கின்றான்**” என்று கர்த்தராகிய இயேசு கிறிஸ்து கூறியிருக்கிறார். அவரிலே நிலைத்திருந்து கனி கொடுக்கும் ஜீவியத்தில் வளரும்படியாய், அனுதினமும் பரிசுத்த வேதாகமத்தை கருத்தோடு வாசியுங்கள், ஊக்கமாக ஜெபியுங்கள். தேவனுடைய தூய ஆவியானவர் அவ்வசனங்களை புரிந்து கொள்ள உங்களுக்குத் துணைசெய்வார்.

சபை கூடிவருதலை விட்டுவிடாதிருங்கள். நீங்கள் ஒரு ஆவிக்குரிய கிறிஸ்தவ ஐக்கியத்தில் இணைந்திருந்தால், அங்கே போதிக்கப்படும் தேவ வார்த்தைகளுக்கு ஆர்வமாய் செவிகொடுங்கள். தேவ வார்த்தைகளுக்கு கீழ்ப்படியுங்கள். கருத்தோடு தேவனை சேவியுங்கள். இயேசு கிறிஸ்துவுக்குள், உங்களைக் குறித்ததான பிதாவாகிய தேவனின் சித்தத்தை நிறைவேற்றுங்கள்.

கர்த்தராகிய இயேசு இந்த உலகத்தில் இருந்த நாட்களில் அவரைத் தேடி பலதரப்பட்ட ஜனங்கள் வந்தார்கள்.

- சிலர் அவர் பேச்சிலோ செய்கையிலோ குற்றம் பிடிக்கும் படியாக வந்தார்கள் (**மாற்கு 3:2, மத்தேயு 16:1, 22:15**)
- சிலர் சுயலாபம் கருதி அவர் பின் சென்றார்கள். (**யோவான் 6:26**)
- சிலர் ஒடுக்கப்பட்ட வாழ்க்கையில் இருந்து விடுதலை அடையும் படியாக உண்மையான மனதுடன் வந்தார்கள். (**மத்தேயு 15:30**)

இயேசுவை உண்மை மனதுடன் தேடி வந்தவர்கள் தங்கள் இக்கட்டான சூழ்நிலையிலிருந்து விடுதலை அடைந்தார்கள். அதே போல, பயனடையும்படியாக, சீரான நோக்கத்துடன் இந்த தியான குறிப்புக்களை வாசியுங்கள். எங்கள் எழுத்துக்கள் அல்ல, தரப்பட்ட கதைகள் அல்ல, தேவனுடைய வார்த்தையே ஜீவனுள்ளது.

கர்த்தராகிய இயேசுக் கிறிஸ்துதாமே உங்களை வழி நடத்துவாராக!

**‘உள்ளான மனிதன்’ சஞ்சிகை செயற்பாட்டுக் குழு**

**ரொரன்ரோ, கனடா**

# தேவனுடைய வார்த்தை

**லூக்கா 11:28**
**தேவனுடைய வார்த்தையைக் கேட்டு, அதைக் காத்துக்கொள்ளுகிறவர்களே அதிக பாக்கியவான்கள் என்றார்.**

யூதாவின் ராஜாவாகிய யோசபாத்தும் இஸ்ரவேலின் ராஜாவாகிய ஆகாப்பும், சீரியா ராஜாவுக்கு எதிராக யுத்தத்திற்கு போனார்கள். இஸ்ரவேலின் ராஜா தனக்கென்று ஏறக்குறைய 400 தீர்க்கதரிசிகளை வைத்திருந்தான். இவர்கள் ராஜாவிற்கு சாதகமாகவே தீர்க்கதரிசனம் சொல்வார்கள். அதன்படி நீர் யுத்தத்திற்கு போம், சீரியா உம்முடைய கையில் ஒப்புக் கொடுக்கப்படும் என்றார்கள். ஆனால் யூதாவின் ராஜாவாகிய யோசபாத்: நாம் விசாரித்து அறிகிறதற்கு இவர்களை யல்லாமல் கர்த்தருடைய தீர்க்கதரிசி வேறே யாராகிலும் இங்கே இல்லையா என்று கேட்டான். அப்பொழுது இஸ்ரவேலின் ராஜா, யோசபாத்தை நோக்கி: கர்த்தரிடத்தில் விசாரித்து அறிகிறதற்கு இம்லாவின் குமாரனாகிய மிகாயா என்னும் இன்னும் ஒருவன் இருக்கிறான் ஆனாலும் நான் அவனைப் பகைக்கிறேன் அவன் என்னைக் குறித்து நன்மையாக அல்ல, தீமையாகவே தீர்க்கதரிசனஞ் சொல்லுகிறவன் என்றான். ஏனெனில் மிகாயா மட்டுமே தேவனுடைய தீர்க்கதரிசியாக இருந்தான். அவன் ராஜாவுக்கு எதிராக தீர்க்கதரிசனம் சொல்ல வேண்டும் என்று இருக்கவில்லை ஆனால் தேவன் கூறும் வார்த்தையை அப்படியே உரைத்தான். மற்ற 400 பேரும் பொய் தீர்க்கதரிசிகளாக இருந்தார்கள். பிரியமானவர்களே, இன்றும் பலர் தங்களுக்கு சாதகமான வழிகளை தேடுகின்றார்கள். எப்போதும் தாங்கள் கேட்பதற்கு இனிமையான வசனங்களை சொல்லுபவர்களையும், தங்கள் வாழ்க்கையில் தாங்கள் விரும்பி செய்வதெல்லாம் சரி, அதை ஆண்டவர் ஆசீர்வதிப்பார் என்று கூறும் இடங்களையுமே தேடுகின்றார்கள். ஆகாப் ராஜாவை தேவனுடைய தீர்க்கதரிசியான மிகாயா எச்சரித்தும் அதை மீறி, 400 பொய் தீர்க்கதரிசிகளின் சொற்படி யுத்தத்திற்கு போனான், ஆனால் உயிரோடு திரும்பி வரவில்லை. நாங்கள் தேவனுடைய வார்த்தையை கேட்டு அதன்படி செய்யும் மனதுள்ளவர்களாக வாழ வேண்டும்.

**ஜெபம்:** பரலோக தேவனே, என் சுய விருப்பத்திற்கேற்ற பிரகாரம் உம்முடைய சித்தம் என் வாழ்வில் இருக்கும் படி எதிர்பார்க்காமல், உம்முடைய சித்தத்தின்படி என் வாழ்க்கையை வாழ என்னை வழி நடத்துவீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்

**வேதாகமக் குறிப்பு:** 1 இராஜாக்கள் 22:1-37

# பலனளிக்கும் நற்கிரியைகள்

**அப்போஸ்தலர் 4:12**

**அவராலேயன்றி (இயேசுவினால்) வேறொருவராலும் இரட்சிப்பு இல்லை. நாம் இரட்சிக்கப்படும்படிக்கு வானத்தின் கீழெங்கும், மனுஷர்களுக்குள்ளே அவருடைய நாமமேயல்லாமல் வேறொரு நாமம் கட்டளையிடப்படவும் இல்லை என்றான்.**

பவுல் என்று அழைக்கப்பட்ட சவுல் தன் சிறிய வயதிலிருந்தே அதிக மத வைராக்கியம் உடையவனாக இருந்தான். தான் நம்பியிருந்த மதத்தின் பிரமாணங்களின்படி இவன் எந்தக் குற்றத்தையும் செய்யவில்லை. இந்தப் பிரமாணங்களில், களவு செய்யாதிருப்பாயாக, பொய் சொல்லாதிருப்பாயாக, கொலை செய்யாதிருப்பாயாக, மோக பாவம் செய்யாதிருப்பாயாக என்பவைகளும் அடங்கும். அந்த நாட்களில் உலகத்தில் சிறந்து விளங்கிய ரோம ராஜ்யத்தின் பிரஜா உரிமையை உடையவனாக இருந்தான். காமாலியேல் என்னும் பிரபல்யமான வேத வல்லுனரிடம் வேத பிரமாணங்களை கற்றுத் தேறினான். அப்படியிருந்தும், அவர் இயேசுவை சந்திக்கும் வரைக்கும் பரலோகம் செல்வதற்குரிய மீட்பை கண்டடைய முடியவில்லை. ஏனெனில் மனித குலத்திற்கு **இரட்சிப்பானது இயேசு கிறிஸ்துவினால் மட்டும் உண்டாகின்றது**. இன்றும் பலர் தங்கள் சுய நற்கிரியைகளை குறித்து மேன்மை பாராட்டிக் கொள்வார்கள். நான் புகைபிடிப்பதில்லை, நான் மதுபானம் அருந்துவதில்லை, தகாத பழக்கங்கள் ஏதும் என்னிடம் இல்லை, ஏழை எளியவர்களுக்கு உதவி செய்கின்றேன், மதப்பற்றுள்ளவனாக இருக்கின்றேன், நன்றாக கற்றுத் தேறியிருக்கின்றேன், சமுக மட்டத்தில் நல்ல பெயர் புகழோடு இருக்கின்றேன் என்று அவைகளில் திருப்பதியடைந்து விடுகின்றார்கள். இந்த சன்மார்க்க வழிகள் மனிதர் மத்தியிலே பெயரும் புகழும், இந்த பூமியலே மனிதருக்கு மனத்திருப்தியை மட்டுமே தரும். “நானே வழியும் சந்ததியமும் ஜீவனுமாயிருக்கின்றேன்” “என்னையல்லாமல் ஒருவனும் பிதாவினிடத்தில் வரான்” என்று மீட்பராகிய இயேசு கூறியிருக்கின்றார். எனவே எங்கள் நற்கிரியைகள் பரலோகத்தில் பலனளிக்க வேண்டுமாயின் அவைகளை கிறிஸ்துவுக்குள் நடப்பிக்க வேண்டும்.

**ஜெபம்:** அன்புள்ள தேவனே, உம்முடைய குமாரனும், எங்கள் கர்த்தருமாகிய இயேசு கிறிஸ்துவை பற்றி, அவருக்குள் நற்கிரியைகளை செய்து வாழ கிருபை செய்வீராக. இரட்சகர் இயேசு கிறிஸ்து வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்!

# பரத்திலிருந்து வரும் மெய்ஞானம்

**1 இராஜாக்கள் 2:4**
**நீ உன் தேவனாகிய கர்த்தருடைய கட்டளைகளையும், கற்பனைகளையும், நியாயங்களையும், சாட்சிகளையும் கைக்கொள்ள, அவர் வழிகளில் நடக்கும்படிக்கு அவருடைய காவலைக் காப்பாயாக.**

பெற்றோர்கள் தாங்கள் பிள்ளைகள் நன்றாக கல்வி கற்றுத் தேறும்படியாக, அதிககதிகமாக அறிவுரை கூறி, அதற்காக பிரயாசப்படுகின்றார்கள். தாங்கள் விட்ட பிழையை பிள்ளைகள் விடக் கூடாது என்று ஒரு சாராரும், தாங்கள் சிறப்பாக கற்றது போல பிள்ளைகளும் கற்க வேண்டும் என ஒரு சாராரும் விரும்புகின்றார்கள். கற்றுத் தேறுவதால் நல்ல உத்தியோகத்தை செய்து, தாராளமாக உழைத்து, நன்மதிப்போடு வாழலாம் என்று எண்ணுகின்றார்கள். தாவீது என்னும் மனிதன், ஒரு யுத்த வீரனும், தேசத்தை ஆண்ட பேரரசனும், தீர்க்கதரிசியாகவும் இருந்தான். தன்னுடைய கடைசி காலத்திலே, ராஜ்யபாரத்தை ஆளப்போகும் தன்னுடைய மகனுக்கு சமாதானமான வாழ்விற்கு வேண்டிய அறிவுரையை கூறினான். ஞானத்தை கண்டடையும் வழியை தன் தகப்பனாகிய தாவீது காண்பித்தார் என சாலமோன் விளம்பியதாவது: நான் என் தகப்பனுக்குப் பிரியமான குமாரனும், என் தாய்க்கு மிகவும் அருமையான ஒரே பிள்ளையுமானவன். அவர் எனக்குப் போதித்துச் சொன்னது: உன் இருதயம் என் வார்த்தைகளைக் காத்துக்கொள்ளக்கடவது. என் கட்டளைகளைக் கைக்கொள், அப்பொழுது பிழைப்பாய். ஞானத்தைச் சம்பாதி, புத்தியையும் சம்பாதி என் வாயின் வார்த்தைகளை ம்றவாமலும் விட்டு விலகாமலும் இரு. இந்நாளில் ஒரு வேளை எங்கள் பெற்றோர் தேவனை அறியாதபடியால், ஞானத்தை கண்டடையும் வழியை எங்களுக்கு போதிக்காதிருந்திருக்கலாம். ஆனால் நாங்கள் எங்கள் பிள்ளைகளுக்கு ஞானத்தை கண்டடையும் வழியை காண்பித்து, அதை பற்றிக் கொள்ளும்படி அவர்களை உற்சாகப்படுத்த வேண்டும். கர்த்தருக்குப் பயப்படுதலே ஞானத்தின் ஆரம்பம். பரிசுத்தரின் அறிவே அறிவு. கர்த்தர் ஞானத்தைத் தருகிறார் அவர் வாயினின்று அறிவும் புத்தியும் வரும்.

ஜெபம்: அன்புள்ள தேவனே, மெய் ஞானம் உம்மிடத்திலிருந்து வருகின்றது. உம் சித்தம் என் வாழ்க்கையில் நிறைவேற, சமாதானமான வாழ்க்கை வாழ மெய் ஞானத்தை எனக்குத் தாரும். இரட்சகர் இயேசு கிறிஸ்து வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்

# சேவை கொள்ளும்படி அல்ல சேவை செய்ய அழைக்கப்பட்டோம்.

**மாற்கு 10:45**
**அப்படியே, மனுஷகுமாரனும் ஊழியங்கொள்ளும்படி வராமல், ஊழியஞ்செய்யவும், அநேகரை மீட்கும்பொருளாகத் தம்முடைய ஜீவனைக்கொடுக்கவும் வந்தார் என்றார்.**

ஒரு சமயம், இயேசுவின் இரண்டு சீஷர்களாகிய யாக்கோபும் அவனுடைய சகோதரனாகிய யோவானும், இயேசுவினிடத்தில் வந்து, உமது மகிமையிலே, எங்களில் ஒருவன் உமது வலது பாரிசத்திலும், ஒருவன் உமது இடதுபாரிசத்திலும் உட்கார்ந்திருக்கும்படி அருள் செய்யவேண்டும் என்றார்கள். அதற்கு இயேசு: அதை அருளுவது என் காரியமல்ல என்று கூறினார். இதை கேட்ட மற்ற சீஷர்கள், யாக் கோபின் மேலும் யோவானின் மேலும் எரிச்சலானார்கள். அப்பொ ழுது, இயேசு அவர்களைக் கிட்டவரச்செய்து: புறஜாதியா ருக்கு அதிகாரிகளாக எண்ணப்பட்டவர்கள் அவர்களை இறுமாப்பாய் ஆளுகி றார்கள் என்றும், அவர்களில் பெரியவர்கள் அவர்கள் மேல் கடின மாய் அதிகாரம் செலுத்துகிறார்கள் என்றும், நீங்கள் அறிந்திருக்கி றீர்கள். உங்களுக்குள்ளே அப்படி இருக்கலாகாது உங்களில் எவனா கிலும் பெரியவனாயிருக்க விரும்பினால், அவன் உங்களுக்குப் பணி -விடைக்காரனாயிருக்கக்கடவன். உங்களில் எவனாகிலும் முதன்மை யானவனாயிருக்க விரும்பினால், அவன் எல்லாருக்கும் ஊழியக்கார னாயிருக்கக்கடவன். பிரியமானவர்களே, இதை நாங்கள் எங்கள் வாழ்வில் கைகொள்வதுடன், நாங்கள் வழிநடத்தும் மற்றவர்களின் வாழ்விலும், எங்கள் பிள்ளைகளின் வாழ்விலும் இதைக் கைக்கொள் ளும்படி கற்றுக் கொடுக்க வேண்டும். சேவை செய்யும்படி அழைக்க ப்பட்டோம். இந்த சேவை விசேஷித்த ஆசனத்தில் அமரவும், கவர்ச் சியாக சிறப்புப் பட்டப்பெயரை தரித்துக் கொள்வதற்காக அல்ல. சேவையின் பாதையில் எப்போதும் புகழாரம் இருக்காது. விமர்சன மான பேச்சுக்களும், வசைச் சொற்களையும் கேட்க வேண்டி ஏற்படும். இவற்றைக் கடந்து அழைத்த தேவனின் சித்தத்தை நிறைவேற்றும்ப டியாய் முன்னேறிச் செல்ல வேண்டும்.

**ஜெபம்:** அன்புள்ள பிதாவே, மற்றவர்களுக்கு சேவை செய்யு ம்படியாய் அழைத்தீர். பூமிக்கு உப்பாகவும், உலகத்திற்கு வெளி ச்சமாகவும் இருக்கும்படி, மனத்தாழ்மையை எனக்கு தாரும். இரட்சகராகிய இயேசுவின் வழியாக வேண்டுகின்றேன். ஆமேன்!

# பணிந்த ஆவியுள்ளவர்களாயிருங்கள்

**ஏசாயா 57:15**

**உன்னதத்திலும் பரிசுத்த ஸ்தலத்திலும் வாசம்பண்ணுகிற நான், பணிந்தவர்களின் ஆவியை உயிர்ப்பிக்கிறதற்கும், நொறுங்கினவர்களின் இருதயத்தை உயிர்ப்பிக்கிறதற்கும், நொறுங்குண்டு பணிந்த ஆவியுள்ளவர்களிடத்திலும் வாசம்பண்ணுகிறேன்.**

ஒரு நாள் ஜனங்களுடைய அதிகாரிகளும், மூப்பரும், வேதபாரகரும், பிரதான ஆசாரியனாகிய அன்னாவும், காய்பாவும், யோவானும், அலெக்சந்தரும், பிரதான ஆசாரியனுடைய குடும்பத்தார் யாவரும் எருசலேமிலே கூட்டங்கூடினார்கள். இவர்கள் தேவனடைய ஆசாரிய ஊழியத்தை செய்ய அழைக்கப்பட்டவர்கள், சமுதாயத்தில் நீதியை நிலை நாட்ட நியமிக்கப்பட்டவர்கள், இவர்கள் வேத பிரமாணங்களை முறைப்படி கற்றுத் தேர்ந்த வல்லுனர்கள். இயேசுவின் சீஷர்களாகிய பேதுருவும் யோவானும், இவர்களால் கைது செய்யப்பட்டார்கள். பேதுருவும் யோவானும் வேதபிரமாணங்களை கல்லாதவர்கள் என்று இவர்கள் கூறியிருந்தார்கள். வேத பிரமாணங்களை கற்றுத் தேர்ந்த வர்கள், தாங்கள் எதிர்பார்த்திருந்த மீட்பராகிய இயேசு கிறிஸ்துவின் நற்செய்தியை, பேதுருவும் யோவானும் அறிவித்தப டியினாலேயே இவர்களை கைது செய்தார்கள். இந் நிலையை சற்று ஆராய்ந்து பாருங்கள். தேவ சேவையை செய்கின்றோம் என்று பிரதான ஆசன ங்களில் அமர்ந்திருந்த பெரியவர்களுடன் தேவன் இருக்கவில்லை. தேவ சேவைக்கு தங்களைத் தாழ்த்தி, அர்ப்பணித்த எளிமையான மனிதர்களுடன் தேவன் இருந்தார். அவர்கள் சிறையிலே இருந்தாலும், தேவ சமுகம் அங்கே அவர்களுடன் இருந்தது. பிரியமானவர்களே, எப்போதும் விழிப்புடன் தேவனுடைய காரியங்களை உங்கள் வாழ் வில் ஆராய்ந்து பாருங்கள். ஆண்டுகள் கடந்து செல்லும் போது, தேவன் என்னுடன் இருக்கின்றார் என்று ஊகித்து இறுமாப்படையா திருங்கள். நான் தேவனுடைய வார்த்தைக்கு செவி கொடுக்கின்றேன், தேவன் என்னுடன் இருப்பதையும், அவர் அழைத்த அழைப்பையும் நிறைவேற்றுகின்றேன் என்பதையும் உறுதிப்படுத்திக் கொண்டு முன்னேறிச் செல்லுங்கள்.

**ஜெபம்:** அன்பும் இரக்கமுமுள்ள பிதாவே, உம்முடைய பணிக்கு எந்த விதத்திலும் எதிர்த்து நிற்காமல், உம்முடைய கிரியைகளை உணர்ந்துகொள்ளத்தக்கதாக இருதயத்தைத் தாரும்.இரட்சகர் இயேசு கிறிஸ்து வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்!

# ஐக்கியத்தின் இலக்கு..

**பிலிப்பியர் 3:15-16**
**கிறிஸ்து இயேசுவுக்குள் தேவன் அழைத்த பரம அழைப்பின் பந்தயப்பொருளுக்காக இலக்கை நோக்கித் தொடருகிறேன். ஆகையால், நம்மில் தேறினவர்கள் யாவரும் இந்தச் சிந்தை யாயிருக்கக்கடவோம்.**

ஒரு கிராமத்தில் இருந்த சனசமுகநிலையத்தின் வருடாந்த ஒன்று கூடல் நடைபெற்றது. யாவரும் ஒருமைப்பாட்டுடன் மகிழ்ச்சியாக இருந்தார்கள். அங்குள்ள மனிதன் ஒருவர் மதுபான வெறியுடன் அங்கு வந்து, அங்கு அலங்காரத்திற்கு வைக்கப்பட்ட அழகான பூச்சா டியை தட்டி உடைத்து விட்டான். இதைக் கண்ட அக்கிராமத்தின் மூத்த உறுப்பினர், தீவிரமாக தன் மகனை அழைத்து, வீட்டிற்கு ஓடிச் சென்று, எங்களிடம் இருக்கும் இதைப்போன்ற பூச்சாடியை எடுத்துக் கொண்டு வந்து இவ்விடத்தில் வை என்று கூறினார். அவனும் உடனடியாக அப்படியே செய்தான். விழாவும் நிறைவுடன் முடிவடை ந்தது. சில கிழமைகள் கடந்து சென்ற பின் இந்த சம்பவம், எப்ப டியோ, கழகத்தின் நிர்வாகத்துக்கு எட்டியது. அவர்கள் அந்த மூத்த ஊறுப்பினரை அழைத்து "ஐயா நீங்கள் ஏன் இதை எங்களுக்கு உடனடியாக தெரிவிக்கவில்லை" என்று கேட்டார்கள். அதற்கு அவர்: இந்த விழா வருடத்திற்கு ஒரு முறைதான் நடக்கின்றது. இது இந்தக் கிராமத்தின் சிறப்பம்சம். ஒரு குடிகாரனின் பிழைக்காக, அந்த விழா வின் ஒருமைப்பாட்டை குழப்புவதில் எந்த இலாபமும் இல்லை. எங்கள் இலக்கை நாங்கள் எப்போதும் மனதில் வைத்துக் கொள்ள வேண்டும். பிழைகளை விசாரித்து சீர்திருத்த நேரங்கள் உண்டு, அந்த நேரம் இப்போது வந்திருக்கின்றது. ஆனால் அந்த உடைக்கப்பட்ட சாடி எங்கள் மகிழ்ச்சியை குலைக்கும் என்றால், எங்கள் ஒன்று கூடலில் அர்த்தமிருக்காது என்று கூறினார். பிரியமானவர்களே, அற்ப காரியங்களுக்காக எங்கள் ஒருமைப்பாட்டை குலைத்து விடாதிருங்கள். குறைகள் நடக்கும் போது அதை பாராமுகமாக விட்டுவிடக்கூடாது. அவற்றை விசாரிக்க ஒரு நேரம் உண்டு. எனவே குறைகள் ஏற்பட்டாலும் எங்கள் ஐக்கியத்தின் கருப்பொருளை மறந்து விடாதிருங்கள்.

**ஜெபம்:** அன்புள்ள பிதாவே, அற்ப காரியங்களுக்காக எங்கள் வாழ்வில் மேன்மையான நோக்கங்களை கெடுத்துப் போடபதடி எங்கதை காத்துக் கொள்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்!

# கிருபையால் நிலை நிற்கின்றோம்

**எபேசியர் 2:8-9**

**கிருபையினாலே விசுவாசத்தைக்கொண்டு இரட்சிக்கப்பட்டீர்கள் இது உங்களால் உண்டானதல்ல, இது தேவனுடைய ஈவு. ஒருவரும் பெருமைபாராட்டாதபடிக்கு இது கிரியைக ளினால் உண்டானதல்ல.**

என்னுடைய வாழ்க்கை தான் "எடுத்துக் காட்டான" வாழ்க்கை என்ற எண்ணம் உங்கள் மனதில் உள்ளிட இடங்கொடுக்காதிருங்கள். இப்படியான எண்ணம் எங்கள் சிந்தையில் இருக்குமாயின், பெருமை அங்கே இருக்கும். பெருமை எங்கள் வாழ்க்கையில் இருக்கும் போது, தேவனுடைய கட்டளைகளை என் வாழ்வில் அல்ல, மற்றவர் களுடைய வாழ்விலே நிறைவேற்றுகிறவர்களாயிருப்போம். ஒரு சமயம், விபசாரத்திலே கண்டுபிடிக்கப்பட்ட ஒரு ஸ்திரீயை வேதபார கரும் பரிசேயரும் இயேசுவிடத்தில் கொண்டுவந்து, அவளை நடுவே நிறுத்தி: போதகரே, இந்த ஸ்திரீ விபசாரத்தில் கையும் மெய்யுமாய்ப் பிடிக்கப்பட்டாள். இப்படிப்பட்டவர்களைக் கல்லெறிந்து கொல்லவே ண்டுமென்று மோசே நியாயப்பிரமாணத்தில் நமக்குக் கட்டளையிட்டிரு க்கிறாரே, நீர் என்ன சொல்லுகிறீர் என்றார்கள். இயேசு அவர்களை நோக்கி: உங்களில் பாவமில்லாதவன் இவள்மேல் முதலாவது கல்லெ றியக்கடவன் என்று சொன்னார், அவர்கள் அதைக் கேட்டு, தங்கள் மனச்சாட்சியினால் கடிந்துகொள்ளப்பட்டு, பெரியோர்முதல் சிறியோர் வரைக்கும் ஒவ்வொருவராய்ப் போய்விட்டார்கள். இயேசு தனித்திரு ந்தார், அந்த ஸ்திரீ நடுவே நின்றாள். பிரியமானவர்களே, இந்த ஸ்திரி உண்மையிலே பாவிதான், ஆனால் இவளுக்கு கல்லெறியும்படி வந்தவர்களில் யாரும் நீதிமான்கள் அல்ல. அவர்கள் தங்கள் வாழ்க் கையில் தேவகட்டளையை நிறைவேற்றாமல், பாவியாகிய இந்த ஸ்திரி யின் வாழ்வில் தேவ கட்டளைகளை நிறைவேற்றும்படியும், இயேசு கிறிஸ்துவில் ஏதாவது குற்றம் பிடிக்கலாம் என்றும் இருந்தா ர்கள். பிரியமானவர்களே, நாங்கள் அப்படியிருத்தலாகாது, தேவனு டைய கிருபை எங்கள் வாழ்க்கையில் இல்லையென்றால், நாங்கள் ஒன்று மில்லை. தேவனுடைய கட்டளைகளை, மற்றவர்களுடைய வாழ் -வில் அல்ல, எங்கள் வாழ்வில் நிறைவேற்றுகிறவர்களாக இருக்க வேண்டும்.

**ஜெபம்:** இரக்கமுள்ள பரலோக தகப்பனே, உம்முடைய கிருபையினாலே நிலை நிற்கின்றோம். அதை மறந்துவிடாமல் நன்றியுள்ளவனாக(ளாக) வாழ கிருபை செய்யும்.இரட்சகர் இயேசு கிறிஸ்து வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்!

# எச்சரிக்கையுள்ளவராயிருங்கள்

**1 கொரிந்தியர் 15:33**

**மோசம்போகாதிருங்கள் ஆகாத சம்பாஷணைகள் நல்லொழுக்கங்களைக் கெடுக்கும்.**

தங்கள் வாழ்க்கையில், கர்த்தராகிய இயேசுவை சொந்த இரட்சகராக ஏற்றுக்கொள்ளாத உன் நண்பர்களை குறித்து எச்சரிக்கையாயிரு என தந்தையார், தன் வாலிப வயதுள்ள மகனிடம் கூறினார். நீங்கள் சொல்வது மிகவும் கடுமையான காரியம், அதிகமாக சிந்திக்கின்றீர்கள், என்னுடைய வரையறை எனக்கு தெரியும் என தன் தந்தைக்கு பதிலளித்தான். மகனே! காலங்கள் வரும் போது இதை நீ உணர்ந்து கொள்வாய். என் சொல்லைக் கேட்டு எச்சரிக்கையாய் இரு! என்றார். ஆனால் அவனோ தந்தையாரின் பேச்சை நாகரீகமான உலகிற்கு ஏற்புடையதல்ல என்று தள்ளிவிட்டான். பல ஆண்டுகள் கடந்து விட்டது, தந்தையாரின் காலம் முடிந்து விட்டது. இவன் தனித்திருக்கும் போது "**எச்சரிக்கையாயிரு**" என்ற வார்த்தை இவன் மனதில் ஓடிக்கொண்டிருந்தது. தேவனை அறியாத மனிதர்களோடு நட்பு வைத்த நாட்களிலே, சொற்ப நேரம் அரசியலை பற்றி கதைத்தோம், பின்பு விளையாட்டுகளை பற்றி கதைத்தோம், கல்வி வேலையை பற்றி கதைத்தோம், மிகுதியான நேரங்களில் அநாவசியமான பேச்சுக்களே இருந்தது. அந்த பேச்சுகளால் இருதயம் நிறைந்திருந்தது, அவற்றுள் சில மனதில் ஆழமாக ஒட்டிக் கொண்டது என வருந்தினான். அவர்கள் இயேசுவை அறியாதபடியால், தேவனுடைய காரியங்களை அற்பமாக எண்ணியிருந்தார்கள், தேவனை பற்றும் பேச்சுக்கு இடமே இருந்ததில்லை. புத்தியீனமான பேச்சும் களியாட்டமுமே தேறின இலாபமாக இருந்தது. பிரியமானவர்களே, நீங்கள் எந்த வயதிலிருந்தாலும், நீங்கள் யாருடன் அதிக நேரம் செலவிடுகின்றீர்கள் என ஆராய்ந்து பாருங்கள். நீங்கள் அதிகமாக விரும்பி பழகிறவர்களுடன், தேவனை பற்றி அதிகமாக பேசக்கூடியதாக இருக்கின்றதா? அதற்கு பதில் ஆம் என்றால் நல்லது. தேவனுக்கு பயந்து அவர் வழியில் நடக்கின்றவர்களை நண்பர்களாக்கிக் கொள்ளுங்கள்.

**ஜெபம்:** பரிசுத்த பிதாவே, உம்முடைய வார்த்தைகளுக்கு எதிரான சம்பாஷனைகளில் ஈடுபடாதிருக்க கிருபை செய்யும். இரட்சகர் இயேசு கிறிஸ்து வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்!

# இருதயத்தின் ஆசைகள் என்ன?

**நீதிமொழிகள் 4:23**
**எல்லாக் காவலோடும் உன் இருதயத்தைக் காத்துக்கொள், அதினிடத்தினின்று ஜீவஊற்று புறப்படும்.**

ஒரு மனிதனுக்கு டெனிஸ் விளையாட்டு என்றால் போதும். தன்னுடைய உத்தியோகம், குடும்ப விவகாரங்கள் போன்றவைகளின் மத்தியில் நேரம் போதாததாக இருந்தாலும், டெனிஸ் விளையாட்டுப் போட்டிகளை பார்ப்பதற்கும், தன் நண்பர்களோடு அதை விளையாடுவதற்கும் எப்படியாவது குறித்த நேரத்தை ஒதுக்கி வைப்பார். ஏனெனில் டெனிஸ் விளையாட்டு இவர் இதயத்தின் வாஞ்சை. இப்படியாக மனிதர்களின் வாழ்க்கையில், அவர்கள் இருதயத்தின் வாஞ்சைகள் பலவிதமானவைகள். சன்மார்க்கமானவைகளும், துன்மார்க்கமானவைகளும் உண்டு. மதுபான வெறிகொள்ளும் விருப்பம் உள்ளவன், அந்த இச்சையை நிறைவேற்றுவதற்கு, அவனுடைய மனைவியோ, அல்லது அவனுடை பிள்ளைகளோ அதை தடுக்க முடியாது. அவர்களைவிட மதுபானத்தை அவன் அதிகம் நேசிக்கின்றவனாக இருப்பான். “உங்கள் பொக்கிஷம் எங்கேயிருக்கிறதோ அங்கே உங்கள் இருதயமும் இருக்கும்.” என கர்த்தராகிய இயேசு கூறியிருக்கின்றார். எனவே எங்கள் இருதயத்தை என்னத்தால் நிரப்புகி ன்றோம் என மிகவும் அவதானமாக இருக்கவேண்டும். தேவையற்ற சம்பாஷணைகள், பண்பற்ற செய்திகள், காட்சிகளால் தங்கள் இருத யத்தை நிரப்பினால், இக்கட்டு நேரங்களில் அவைகளே உங்களை அழிவுக்கு கொண்டு செல்லும். வெறுமையான இருதயத்தில் உலக இச்சைகள் தங்கும். எனவே எங்கள் இருதயத்தை எங்கள் வாழ்க் கையை எந்த சூழ்நிலையிலும் சமாதானமாக காத்துக் கொள்ளும் தேவனுடைய வார்த்தைகளால் நிரப்ப வேண்டும். வேத வார்த்தை களை தியானம் செய்து அவைகளை இருதயத்தில் பதித்து வைக்க வேண்டும். அப்போது எங்கள் வழிகளிலெல்லாம் நாங்கள் புத்திமா ன்களாய் நடந்து கொள்வோம்.

**ஜெபம்:** என் நேச தகப்பனே, என்னுடைய இருதயம் இந்த உலக இச்சைகளுக்கு அடிமைப்படாமல், பரலோக பொக்கிஷங்களை நாடித்தேட என்னை உணர்வுள்ளவனா(ளா)க்கும். இரட்சகர் இயேசு கிறிஸ்து வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்!

# வழிநடத்தும் தூய ஆவியானவர்

**சங்கீதம் 119:1**
**கர்த்தருடைய வேதத்தின்படி நடக்கிற உத்தம மார்க்கத்தார் பாக்கியவான்கள்.**

உலக தோற்ற முதல் தேவனுக்கென்று தங்களை ஒப்படைத்து வாழ்ந்த பல பரிசுத்தவான்கள் இருந்திருக்கின்றார்கள். எடுத்துக் காட்டாக ஆதாமுக்கு ஏழாந்தலைமுறையான ஏனோக்கு என்பவன் தேவனோடு சஞ்சரித்து வந்தான் எனவும் பரிசுத்த வேதாகமத்தில் பார்க்கின்றோம். தேவன் எங்களுக்கு கொடுத்த வேதமும் இவர்கள் ஊடாகவே கொடுக்கப்பட்டது. அவர்கள் நாட்களில் உலகத்திலே கம்யூட்டர், தொழிநுட்ப வளர்ச்சிகள் இருந்ததில்லை. ஆனால் அவர் கள் வேத பிரமாணங்களை கலப்படம் இன்றி, சுத்தமாக அவற்றை கற்று தங்கள் வாழ்வில் கைக்கொண்டிருந்தார்கள். ஏனெனில் தேவனுடைய வழியில் வாழ்ந்த இவர்களின் வாழ்க்கையிலே பரிசுத்த ஆவியானவரின் வழிநடத்தல் பூரணமாக இருந்தது. ஆனால் இன்று, நாங்கள் சாட்டு போக்கு சொல்வதற்கு இடமில்லாமல், தேவனுடைய வார்த்தைகளை கற்பதற்கு நவீன கருவிகள் எங்களுக்கு கொடுக்கப்ப ட்டிருக்கின்றது. எந்த நவீன கருவிகள் இருந்தாலும், நாங்கள் எங்கள் வாழ்க்கையை தேவனுடைய சித்தத்திற்கு ஒப்புக் கொடுக்காவிட்டால், பரிசுத்த ஆவியானவருடைய வழிநடத்தல் எங்கள் வாழ்வில் இருக் காது. பரிசுத்த ஆவியானவரின் வழிநடத்தல் எங்கள் வாழ்வில் இல்லை என்றால் எந்த நவீன கருவிகளை நாங்கள் வைத்திருந் தாலும், அதனால் வரும் பலன் அற்பமே. இன்று பரிசுத்த வேதாகமா னது, அவரவர் சொந்த மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டு, யாவரும் பெற்றுக்கொள்ள கூடிய விலையில், மேலும் இலவசமாக பல ஸ்தாபனங்கள் ஊடாகவும் கொடுக்கப்படுகின்றது. ஒரு வாத்தியக் கருவியை வேண்டி வீட்டில் சும்மா வைத்திருப்பதால் அங்கே இனி மையான இசை தொனிக்கப்போவதில்லை. பரிசுத்த வேதாகமத்தை வீட்டில் ஒரு புத்தகம் போல வைத்திருக்காமல், நித்திய ஜீவனை கொடுக்கும் அந்த வார்த்தைகளை ஆர்வத்தோடு படிக்க வேண்டும். அப்போது பரிசுத்த ஆவியானவர் அவற்றை புரிந்து கொள்ளும் போக்கை உண்டு பண்ணுவார்.

**ஜெபம்:** இரக்கமுள்ள தேவனே, நித்திய ஜீவனை கொடுக்கும் உமது வார்த்தைகளை தினமும் ஆர்வத்தோடு படித்து, அவற்றை கைக்கொள்ள, என்னை வழிநடத்தவீராக. இரட்சகராகிய இயேசுவழியாக ஜெபிக்கிறேன். ஆமேன்!

# உபத்திரவங்கள் மத்தியிலும் முறுமுறு -ப்பற்ற வாழ்க்கை வாழ வேண்டும்.

**ரோமர் 8:37**
**இவையெல்லாவற்றிலேயும் நாம் நம்மில் அன்புகூருகிறவ ராலே முற்றும் ஜெயங்கொள்ளுகிறவர்களாயிருக்கிறோமே.**

வாழ்க்கையிலே உபத்திரவங்களையும் சவால்களையும் எதிர் நோக்கும் போது மனிதர்கள் பெலவீனம் அடைந்து சோர்ந்து போய்விடுகின்றார்கள். எனக்கு ஏன் இந்த நிர்ப்பாக்கியம் என்று கூட சிலர் கூறிக் கொள்வார்கள். கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினால் அழைக்கப்பட்ட பவுல் என்னும் மனிதன், மீட்பின் நற்செய்தியை அன்றைய உலகில், பல சிரமங்கள் மத்தியில், பல இடங்களுக்கு எடுத்துச் சென்றார். நன்மை செய்வதே இவரின் நோக்கமாக இருந்த போதும். தனக்கு வந்த உபத்திரவங்களைப் பற்றி விபரித்துக் கூறினார். “நான் யூதர்களால் ஒன்றுகுறைய நாற்பதடியாக ஐந்துதரம் அடிபட்டேன், மூன்று தரம் மிலாறுகளால் அடிபட்டேன், ஒருதரம் கல்லெறியுண்டேன், மூன்றுதரம் கப்பற்சேதத்தில் இருந்தேன், கடலிலே ஒரு இராப்பகல் முழுவதும் போக்கினேன். அநேகந்தரம் பிரயாணம்பண்ணினேன் ஆறுகளால் வந்த மோசங்களிலும், கள்ளரால் வந்த மோசங்களிலும், என் சுயஜனங்களால் வந்த மோசங்களிலும், அந்நிய ஜனங்களால் வந்த மோசங்களிலும், பட்டணங்களில் உண்டான மோசங்களிலும், வனாந்தரத்தில் உண்டான மோசங்களிலும், சமுத்திரத்தில் உண்டான மோசங்களிலும், கள்ளச்சகோதரரிடத்தில் உண்டான மோசங்களிலும் பிரயாசத்திலும், வருத்தத்திலும், அநேகமுறை கண்விழிப்புகளிலும், பசியிலும் தாகத்திலும், அநேகமுறை உபவாசங்களிலும், குளிரிலும், நிர்வாணத்திலும் இருந்தேன்”. இவற்றின் மத்தியிலும் மனம் தளராது, தன்னை அழைத்த தேவனின் பணியை பொறுமையோடு செய்து முடித்தார். எங்கள் வாழ்வில் இப்படிப்பட்ட உபத்திரவங்களை சந்திப்பதில்லை. ஆனாலும் நாங்கள் சோர்ந்து போய்விடுகின்றோம். உபத்திரவங்களின் மத்தியிலும் நாங்களும் தேவனுடைய சித்தத்தை நிறைவேற்ற வேண்டும். அழைத்த தேவன் எங்களை கைவிடமாட்டார்.

**ஜெபம்:** அன்புள்ள தகப்பனே, என்ன வந்தாலும் நீர் என்னை கைவிடமாட்டீர் என பூரணமாக விசுவாசிக்கின்றேன். உம்முடைய பணியை செய்து முடிக்க பெலன் தருவீராக. இரட்சகர் இயேசு கிறிஸ்து வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்!

# வேதத்திலுள்ள நல் ஆலோசனைகள்

**எபேசியர் 4:22**

**அந்தப்படி, முந்தின நடக்கைக்குரிய மோசம்போக்கும் இச்சைகளாலே கெட்டுப்போகிற பழைய மனுஷனை நீங்கள் களைந்துபோட்டு,**

தேவன் பொல்லாங்கினால் சோதிக்கப்படுகிறவரல்ல, ஒருவனையும் அவர் சோதிக்கிறவருமல்ல. அவனவன் தன்தன் சுய இச்சையினாலே இழுக்கப்பட்டு, சிக்குண்டு, சோதிக்கப்படுகிறான். பின்பு இச்சையானது கர்ப்பந்தரித்து, பாவத்தைப் பிறப்பிக்கும், பாவம் பூரணமாகும்போது, மரணத்தைப் பிறப்பிக்கும் என பரிசுத்த வேதாகமத்தில் வாசிக்கின்றோம். நான் மதியீனமான இந்தக் குழிக்குள் விழுந்து விட்டேன் என்று மனம் நொந்து கொள்ளுகின்றவர்கள் பலர். வாக்குவாதங்கள், சண்டைகள், பிரிவினைகள், மோக பாவம் போன்றவற்றை நிறைவேற்ற வேண்டும் என்ற ஆசை இச்சைகள் இருதயத்திலே தோன்றும் சாத்தியம் உண்டாகின்றது என்று அறியும் போது, அந்த இச்சைகளை முற்றாக அழித்து விடுவது அல்லது அவற்றை மேற்கொள்வது அல்லது அவற்றை விட்டு விலகியோடுவது சுலபம். ஆசை இச்சைகள் இருதயத்திலே நிறைவடைய விட்டுவிடுவோமென்றால், அந்த இச்சைகளை நிறைவேற்றுளவும், எந்த உபதேசமும், புத்திமதியையும் ஏற்றுக் கொள்ளக்கூடிய மனநிலை இருக்காது. எங்கள் முழு பலமும் அந்த இச்சைகளை நிறைவேற்றும் வழியை தீவிரமாக நடப்பிக்கும். விவாதம் எழும்புமுன் அதை விட்டுவிடு, பாலியத்திற்குரிய இச்சைகளை விட்டு விலகியோடு, புத்தியீனமும் அயுக்தமுமான தர்க்கங்களிலிருந்து விலகி இரு என்று பல புத்திமதிகளை வேதத்தில் காண்கின்றோம். எங்களுக்கு சோதனைகளாக தோன்றுகின்ற மாம்ச இச்சைகளை விட்டு விலகுவது மட்டுமல்லாமல், அவை மறுபடியும் தோன்றக்கூடிய வழிகள் எங்கள் கட்டுப்பாட்டுக்குள் இருந்தால் அவைகளை முற்றாக ஒழித்துவிட வேண்டும். வைத்துப் பார்ப்பேன், என்ன நடக்கின்றது என பார்ப்போம் என்று இது சின்னப் பாம்புதானே என்று விட்டுவிடாதிருங்கள், அது வளர்ந்து ஒருநாள் உங்ளை தீண்டிவிடும். எங்கள் பலவீன நேரங்களில் எங்களுக்கு புது பெலன் தரும் தேவனை அண்டிச் சேருங்கள். அவருடைய ஆலோசனைகளை வேதத்தின் மூலமாகவும், ஆலயத்தில் பிரசங்கங்கள் ஊடாகவும் கேட்கின்றோம். ஞானமுள்ளவர்களாய் நடந்து, தேவ ஆலோசனைகளின் படி நடவுங்கள்.

**ஜெபம்:** பரலோகத்திலிருக்கின்ற எங்கள் பிதாவே, மாம்சத்தின் ஆசை இச்சைகளை களைந்து உம்முடைய திருவசனத்தின்படி வாழ என்னை உணர்வுள்ளவனா(ளா)க்கும். இரட்சகராகிய இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்!

# ‘வெளிப்படுத்தப்பட்டவைகள்’

**எபேசியர் 4:29**
**பக்திவிருத்திக்கு ஏதுவான நல்ல வார்த்தை உண்டானால் அதையே கேட்கிறவனுக்குப் பிரயோஜனமுண்டாகும்படி பேசுங்கள்.**

புதிய வெளிப்பாடுகளை கண்டடைய வேண்டும் என்று சொல்லி, பரிசுத்த வேதாகமத்திற்கு அப்பாற்பட்ட, பக்திவிருத்தியற்ற விடயங்களில் சிலர் சிக்கிக்கொள்கின்றார்கள். இதனால் விவாதங்களும் பிரிவினைகளும் சபை ஐக்கியத்திலே ஏற்பட்டுவிடுகின்றது. பிரிவினைகள் தேவனிடத்திலிருந்து வருபவைகள் அல்ல. நாங்கள் யாவரும் பரிசுத்த வேதாகமத்தை ஆர்வமாக வாசித்து, ஆராய்ந்து பார்க்க வேண்டும். இந்த ஆர்வமும் ஆராய்ச்சியும் மனிதர்களுடைய வாழ்க்கைக்கு சமாதானத்தையும், தேவனுடைய பிள்ளைகளுடனான ஐக்கியத்திற்கு உறுதியையும் கொடுக்கும். தேவனுடைய வார்த்தைகள் பக்திவிருத்தியை உண்டுபண்ணி, எங்களை இன்னமுமாய் தேவனை கிட்டிச் சேரப்பண்ணுகின்றது. எனவே புதிய வெளிப்பாடுகள் என்ற போர்வையில் தேவனுடைய அடிப்படை உண்மைகளை மறந்து விடாதிருங்கள். அவற்றுள் சில: நீ உன் தேவனாகிய கர்த்தரிடத்தில் உன் முழு இருதயத்தோடும், உன் முழு ஆத்துமாவோடும், உன் முழுப் பலத்தோடும் அன்புகூருவாயாக. உன்னை நேசிப்பது போல உன் அயலவனையும் நேசி. கிறிஸ்துவுக்குள், உங்களைக் குறித்ததான பிதாவாகிய தேவனின் சித்தத்தை நிறைவேற்றுதல், பக்திவிருத்திக்கு ஏதுவல்லாத எந்த சம்பாஷணைகளையும் விட்டுவிடுங்கள். மனுஷர் உங்கள் நற்கிரியைகளைக்கண்டு, பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதாவை மகிமைப்படுத்தும்படி, உங்கள் வெளிச்சம் அவர்கள் முன்பாகப் பிரகாசிக்கக்கடவது. இப்படியாக நாங்கள் அறிந்த அடிப்படை உண்மைகளை எந்த காரணத்திற்காகவும் அலட்சியம் செய்து விட்டுவிடக்கூடாது. வேதத்தை வாசியுங்கள், ஊக்கமாக ஜெபம் செய்யுங்கள். வெளிப்படுத்தப்பட்ட அடிப்படை உண்மைகளை மறந்துவிடாதிருங்கள்.

**ஜெபம்:** அன்புள்ள எங்கள் தேவனே, எந்தக் காரணத்திற்கும் என் இலக்கை மறந்துவிடாமல், எப்போதும் பக்திவிருத்திக்கு ஏதுவான காரியங்களை பேச கிருபை செய்யும். இரட்சகராகிய இயேசு கிறிஸ்து வழியாக ஜெபிக்கிறேன். ஆமேன்!

# மனிதருடைய வழிகள் கர்த்தருக்கு மறைவானவைகள் அல்ல.

**நீதிமொழிகள் 5:21**
**மனுஷனுடைய வழிகள் கர்த்தரின் கண்களுக்கு முன்பாக இருக்கிறது. அவனுடைய வழிகளெல்லாவற்றையும் அவர் சீர்தூக்கிப்பார்க்கிறார்.**

வீட்டிலோ, வேலைத் தளத்திலோ, கல்வி நிலையங்களிலோ, ஆலயங்களிலோ, வெளி இடங்களிலோ நீங்கள் செய்யும் நற்கிரியைகள், பிரயாசங்கள் ஒருவராலும் கணக்கெடுக்கப்படதா நிலை ஏற்படுத்தப்பட்டிருக்கின்றதா? மனமுடைந்து போகாதிருங்கள், உங்களை அழைத்த தேவனாகிய கர்த்தர் யாவற்றையும் அறிந்தவராக இருக்கின்றார். சில வேளைகளிலே, பல மட்டங்களிலே, ஏழை எளியோர் ஒடுக்கப்பட்டு அநியாயங்களுக்கு இரையாகும் சந்தர்ப்பங்கள் உண்டு. ஒடுக்கப்பட்டோருக்கு வாழ்வளிக்கும் தேவன் யாவற்றையும் அறிவார். சர்வ வல்லமையுள்ள தேவன், அவர் உன்னதத்திலே வாழ்ந்தாலும் தாழ்மையுள்ளவர்களை கண்ணோக்கிப் பார்க்கின்றார். இவைகளை மட்டுமல்ல, அவர் எங்கள் இருதயத்தின் நினைவுகளையும் வழிகளையும் அறிந்தவராக இருக்கின்றார். மனிதனிடத்திலிருக்கும் மேட்டிமையான கண், பொய்நாவு, குற்றமற்றவர்களுடைய இரத்தம் சிந்துங் கை. துராலோசனையைப் பிணைக்கும் இருதயம், தீங்கு செய்வதற்கு விரைந்தோடுங் கால், அபத்தம்பேசும் பொய்ச்சாட்சி, சகோதரரு க்குள்ளே விரோதத்தை உண்டுபண்ணுதல் போன்றவற்றை மனிதர்கள் வெளிப்படையாக செய்யாவிட்டாலும், அவர்கள் இரகசியமான செயல்கள் கர்த்தருக்கு மறைவானதல்ல. அந்தரங்கத்திலே நாங்கள் என்னத்தை பார்க்கின்றோம், வாசிக்கின்றோம், கேட்கின்றோம், பேசுகின்றோம் என்பதை தேவன் அறிவார். துணிகரமான மோசம் போக்கும் மோக பாவ சிந்தனைகளுக்கு இடங் கொடுக்காதிருங்கள். அவை முடிவிலே உன் மாம்சமும் உன் சரீரமும் உருவழியும்போது நீ துக்கித்து: ஐயோ, போதகத்தை நான் வெறுத் தேனே, கடிந்துகொள்ளுதலை என் மனம் அலட்சியம்பண்ணினதே! என் போதகரின் சொல்லை நான் கேளாமலும், எனக்கு உபதேசம்பண்ணினவர்களுக்கு என் செவியைச் சாயாமலும் போனேனே! சபைக்குள்ளும் சங்கத்துக்குள்ளும் கொஞ்சங்குறைய எல்லாத் தீமைக்குமுள்ளானேனே! என்று முறையிடுவாய். கிறிஸ்துவுக்குள் உங்கள் நற்கிரியைகளிலே முன்னேறுங்கள்!

**ஜெபம்:** பரலோக தேவனே, மோசம் போக்கும் சிந்தனைகளை களைந்து, கிறிஸ்துவுக்குள் நற்கிரியைகளில் பெருகும்படி எனக்கு கிருபை செய்வீராக. இரட்சகர் இயேசு கிறிஸ்து வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்!

# கிரயத்திற்கு கொள்ளப்பட்டீர்கள்!

**1 கொரிந்தியர் 6:19**

**உங்கள் சரீரமானது நீங்கள் தேவனாலே பெற்றும் உங்களில் தங்கியும் இருக்கிற பரிசுத்த ஆவியினுடைய ஆலயமாயி ருக்கிறதென்றும், நீங்கள் உங்களுடையவர்களல்லவென்றும் அறியீர்களா?**

ஆலயத்திற்கு சென்று தேவனை ஆராதிக்கின்றோம், தேவனுடைய வார்த்தைகளை கேட்கின்றோம். சக விசுவாசிகளோடு சம்பாஷிக்கின் றோம். ஆலயத்திலே தேவன் எங்கே இருக்கின்றார்? ஆராதனை மண்டபத்திலா? உணவு பரிமாறும் இடங்களிலா, வெளி முற்றத்திலா, அல்லது வேதபாடங்கள் நடைபெறும் அறைகளிலா? தேவனை ஆராதி க்க ஆராதனை மண்டபத்திற்கு செல்லும் போது பயபக்தியுடன் இருக் கின்றோம். பேச்சுக்களை குறைத்து தியான நிலையிலே இருக்கின் றோம். இவை மிகவும் நன்மையான செயற்பாடுகள். தொடர்ச்சியாக இப்படியே செய்ய வேண்டும். ஏனெனில் தேவனுடைய சமுகம் அங்கே இருக்கின்றது என விசுவாசிக்கின்றோம். அப்படியானால் ஆல யத்தின் மற்றய இடங்களிலே நாங்கள் எப்படியும் நடந்து கொள்ள லாம் என்பது பொருள் அல்ல. கட்டிடங்களில் அல்ல தேவ ஜனங்கள் கூடும் இடத்திலே தேவன் வாசமாக இருக்கின்றார். நாங்கள் எங்கிருந் தாலும் தேவனுடைய ஸ்தானாதிபதிகள்! எங்கள் செயல்களும், எங்கள் பேச்சுக்களும் பிறர் காயம் ஆற்றுவதாக இருக்க வேண்டும். ஆலய மண்டபத்தில் தேவனைத் துதிக்கின்ற நாவு, மண்டபத்திற்கு வெளியில் மற்றய மனிதர்களை சபிக்க முடியாது. ஆலயத்தில் ஒருமனமாக துதித்த தேவ பிள்ளைகள், அந்த மண்டபத்திற்கு வெளியில் இருமனமுள்ளவர்களாக இருக்க முடியாது. வேதத்தில் கூறப்பட்ட பிரகாரம் ஒருவனும் மற்றொருவன் செய்யும் தீமைக்குத் தீமைசெய்யாதபடி பாருங்கள் உங்களுக்குள்ளும் மற்ற யாவருக்கு ள்ளும் எப்பொழுதும் நன்மைசெய்ய நாடுங்கள். நாங்கள் கிரயத்திற்கு கொள்ளப்பட்டவர்கள், நாங்கள் தேவன் தங்கும் ஆலயம் ஆகவே எங்கள் எண்ணங்களும், பேச்சுக்களும், கிரியைகளும் அவருக்கு பிரியமுள்ளதாக இருக்க வேண்டும்.

**ஜெபம்:** இரக்கத்தில் ஐசுவரியமுள்ளவரே எங்களை மீட்டுக் கொண்டவரே, சரீரத்தினாலும் எங்கள் ஆவியினாலும் தேவனை மகிமைப்படுத்த பெலன் தாரும். இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்!

# வாடகை வீடு

**ஏபிரெயர் 13:14**
**நிலையான நகரம் நமக்கு இங்கே இல்லை வரப்போகிற தையே நாடித் தேடுகிறோம்.**

புறதேசத்தில் இருந்து தன் தாய் நாட்டிற்கு பயணம் செய்து கொண்டிருக்கும் மனிதன், விமானநிலையமொன்றில் அடுத்த விமானத்திற்காக சில மணித்தியாலங்கள் காத்திருக்க வேண்டியதாயிற்று. அந்த காத்திருப்பு நேரம் அவனுக்கு சௌகரியமாக இருக்கவில்லை. அங்கிருந்த நாற்காலியொன்றிலே தன் தலையை சாய்த்து ஒய்வெடுத்தான். அசௌகரியங்கள் மத்தியிலும், அவன் எண்ணமெல்லாம் தன் மனைவி பிள்ளைகளைக் குறித்ததாகவே இருந்தது. அவர்களை எப்போது சந்திப்பேன் என்கிற பரபரப்பு அவன் உள்ளத்தில் ஓடிக்கொண்டிருந்தது. தன் சொந்த வீட்டிற்கு செல்வதே அவன் நோக்கமாக இருந்தது. தரித்திருக்கும் இடத்தில், அதிக பணத்தை செலவழித்து, அங்கு சௌகரியமாக அவனுக்கு இருக்க முடியும். ஆனால், அந்த இடம் ஒரு தற்காலிகமான தரிப்பிடம் என்பதை அவன் அறிந்தபடியால், அங்கு அவன் இருதயத்தை பற்றிக் கொள்ளவிடவில்லை. இதே போல, இந்த பூமியிலே மனிதர்களுடைய வாழ்க்கை காலையிலே முளைக்கிற புல்லுக்கு ஒப்பாயிருக்கிறார்கள். அது காலையிலே முளைத்துப் பூத்து, மாலையிலே அறுப்புண்டு உலர்ந்து போம். எங்கள் ஆயுசுநாட்கள் எழுபது வருஷம், பெலத்தின் மிகுதியால் எண்பது வருஷமாயிருந்தாலும், அதின் மேன்மையானது வருத்தமும் சஞ்சலமுமே. அது சீக்கிரமாய்க் கடந்துபோகிறது. இந்த பூமியிலே மனிதனுடைய வாழ்க்கை ஒரு வாடகை வீட்டைப் போல இருக்கின்றதென்பதை உணர்ந்து கொள்ளவேண்டும். இதை உணர்ந்தவர்களாய், இந்த பூமியுடன் அழிந்து போகும் காரியங்களில் எங்கள் இருதயத்தை பற்றிக் கொள்ளவிடாமல், இந்த பூமியின் அசௌகரியங்களை குறித்து நொந்து கொள்ளாமலும், எங்கள் நிரந்திர வசிப்பிடமாகிய பரலோகத்தை வாஞ்சிப்போம்.

**ஜெபம்:** மகத்துவமுள்ள தேவனே, இந்த பூமி எங்களுக்கு சொந்தமானதல்ல. இங்கு இருக்கும் வரைக்கும் உம்முடைய சித்தத்தை நிறைவேற்றுவதையே என் நோக்கமாக கொள்ள எனக்கு கிருபை செய்வீராக. இரட்சகர் இயேசு கிறிஸ்து வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்!

# தேவன் தந்த அளவின்படி...

**ரோமர் 12:3**
**உங்களில் எவனானாலும் தன்னைக்குறித்து எண்ணவே ண்டியதற்கு மிஞ்சி எண்ணாமல், அவனவனுக்கு தேவன் பகிர்ந்த விசுவாச அளவின்படியே, தெளிந்த எண்ணமுள்ள வனாய் எண்ணவேண்டும்.**

எங்களால் செய்ய முடியாத காரியங்களை செய்யும்படியாக தேவன் எங்களிடம் எதிர்பார்ப்பதில்லை. தனித்துவமான அழைப்பை பெற்றவர் களிடம் கூட தேவன் அவர்கள் செய்ய முடியாத செயல்களை திணிக் கவில்லை. மோசே என்ற மனிதனை தேவன் அழைத்து, அவனை பார்வோன் என்னும் அரசனுக்கு முன்பாக அனுப்பினார். பண்டைய எகிப்து ராஜ்யம் மிக பலமிக்கது. பார்வோன் என்பவன் அதை ஆளும் அரசன். மோசே பார்வோனின் பார்வைக்கு அற்பமானவனாக இருந்தான். ஆனால் மோசேயிடமிருந்து அவன் செய்யமுடியாத கடினமான செயல்களை தேவன் எதிர்பார்க்கவில்லை. மோசேக்கு தனி த்துமான, திட்டமான, தெளிவான தேவ அழைப்பு இருந்தது. அவன் செய்ய வேண்டியதெல்லாம், தேவன் கற்பித்ததை கற்பித்த பிரகா ரமாக நடப்பிக்க வேண்டியது மட்டுமே. எடுத்துக் காட்டாக நீ போய் பார்வோனிடம் இவ்விதமாக கூறு என்று சொல்லும் போது, அவன் அப்படியே செய்தான். அந்த செய்கை மனிதர்களுடைய பார்வைக்கு அற்பமாயும், நகைக்கத்தக்கதாகவும் இருக்கலாம். மோசே தேவ சத்த த்திற்கு கீழ்ப்படிந்த போது, தேவன் தாமே யாவரும் வியக்கத்தக்க பலத்த அற்புதங்களை எகிப்திலே நடப்பித்தார். எங்களுடைய வாழ் விலும் தேவன் எங்களால் செய்யமுடியாதவற்றை எதிர்பார்ப்பதில்லை. எங்களுடைய திராணிக்கு மேலாக மற்றவர்களுக்கு உதவும் படியா கவும் தேவன் எதிர்பார்ப்பதில்லை. எங்கள் பெலத்திற்கு மிஞ்சின எண்ணங்கொள்ளக் கூடாது. தேவன் எங்களுக்கு தந்த அளவின்படி எங்கள் வாழ்க்கையில் செயல்களை நாங்கள் நடப்பிக்க வேண்டும். மற்றய மனிதர்களின் பார்வைக்கு அற்பமான காரியமாக இருந்தாலும், தேவ சத்தத்திற்கு நாங்கள் கீழ்ப்படியும் போது, தேவன் தாமே நாங்கள் வியக்கத்தக்க விதமாக பெரிய காரியங்களை நடப்பிப்பார்.

**ஜெபம்:** பரிசுத்த பிதாவே, என்னுடைய பெலத்திற்கு மிஞ்சி என்னை நான் உயர்த்தாமல், எனக்கு தந்த அளவின்படி செயல்களை நடப்பித்து, உம்முடைய நேரத்திற்கு காத்திருக்க கிருபை செய்யும். இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்!

# பரத்திலிருந்து வரும் இரட்சிப்பு

**பயப்படாதிருங்கள் நீங்கள் நின்றுகொண்டு இன்றைக்குக் கர்த்தர் உங்களுக்குச் செய்யும் இரட்சிப்பைப் பாருங்கள்..**

பல இலட்சக்கணக்காக ஜனக்கூட்டம். அதில் யுத்தத்திற்கு செல்லும் வயதையடைந்த ஆண்கள் மட்டும் 6 இலட்சம் உள்ளடங்குவார்கள். இவர்களில் எவரும் யுத்தத்திற்கு பயிற்றப்பட்டவர்கள் அல்ல. இவர்களிடம் எந்த ஆயுதங்களும் இல்லை. 400 வருடங்கள் எகிப்தில் அடிமைகளாக இருந்தார்கள். இவர்கள் தங்கள் சொந்த தேசத்திற்கு செல்லும்படியான யாத்திரையை தொடங்கி, செங்கடலின் கடற்க ரையில் வந்தடைந்தார்கள். அந்த செங்கடலை தாண்டுவதற்கு இவர்க ளிடம் படகுகள் இல்லை. இவர்கள் முன்பாக முன்னேறி செல்ல எந்த வழியும் இல்லை. இந்த சமயத்திலே, எகிப்தின் அரசனாகிய பார்வோனின் சேனை இவர்களை பின்தொடர்ந்து வந்தது. தப்புவதற்கு எந்த வழியும் இல்லை. செங்கடலில் இறங்கினால் ஜலத்தினால் மரணம். பின்னிட்டு சென்றால் பார்வோனின் போர்வீரர்களின் பட்டய த்தால் மரணம். இந்த உலகத்தின் பார்வையிலே இவர்கள் மதியீனர் களாக தென்படலாம். ஆனால், இவர்களை அழைத்தவர் பரலோகத்தி லிருக்கிற சர்வ வல்லமையுள்ள தேவன். பூமியும் அதன் நிறைவும், அதன் குடிகளும் கர்த்தருடையது. ஆனாலும் அந்த ஜனங்கள் தங்கள் தேவன் இன்னார் என்பதை இன்னும் உணராதிருந்தார்கள். அன்றியும் அவர்கள் தங்களை வழிநடத்தும் தலைவனாகிய மோசேயை நோக்கி: எகிப்திலே பிரேதக்குழிகள் இல்லையென்றா வனாந்தரத்திலே சாகும்படிக்கு எங்களைக் கொண்டுவந்தீர்? நீர் எங்களை எகிப்திலி ருந்து புறப்படப்பண்ணினதினால், எங்களுக்கு இப்படிச் செய்தது என்ன? என்றார்கள். மோசே என்பவன் தன் தேவனை நோக்கிப் பார்த்தான். தேவனிடத்தில் இருந்து இரட்சிப்பு வந்தது. ஜலத்திரளான செங்கடல் இஸ்ரவேலருக்கு பாதை திறந்தது ஆனால் அதே ஜலத்திரள் பார்வோனின் சேனைக்கு மரண கண்ணியாக மாறியது. இந்த தேவன் எங்கள் தேவன்! எனவே இக்கட்டில் மனம் தளராமல், இரட்சிப்பு பரத்திலிருந்து வரும்வரை பொறுமையாக இருங்கள்.

**ஜெபம்:** பரலோக தேவனே, எதிரிகளால் சூழ்ந்து கொள்ளப்பட்ட சூழ்நிலைகளை போன்ற சந்தர்ப்பங்கள் என் வாழ்வில் வந்தாலும் உம்மை நோக்கி பார்க்க பெலன் தாரும். இரட்சகர் இயேசு கிறிஸ்து வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்!

# கிறிஸ்துவுக்குள் பிரயாசப்படுவோம்

**1 கொரிந்தியர் 15:58**
**கர்த்தருக்குள் நீங்கள் படுகிற பிரயாசம் விருதாவாயிராதென்று அறிந்து, நீங்கள் உறுதிப்பட்டவர்களாயும், அசையாதவர்களாயும், கர்த்தருடைய கிரியையிலே எப்பொழுதும் பெருகுகிறவர்களாயும் இருப்பீர்களாக.**

நான் உன்னை கைவிடுவதுமில்லை உன்னை விட்டு விலகுவதுமில்லை, அவருடைய பர்வதத்திலே எல்லாம் பார்த்துக் கொள்ளப்படும் என்பது எங்கள் தேவனாகிய கர்த்தரின் வாக்குத்தத்தங்கள். அவர் அப்படியே செய்வார். சில வேளைகளிலே தேவன் எல்லாம் பார்த்து கொள்வார் என்று சொல்லி தாங்கள் செய்ய வேண்டிய கடமைகளை மனிதர்கள் தவறவிட்டுவிடுகின்றார்கள். ஆகாயத்துப் பட்சிகளைக் கவனித்துப்பாருங்கள் அவைகள் விதைக்கிறதுமில்லை, அறுக்கிறதுமில்லை, களஞ்சியங்களில் சேர்த்துவைக்கிறதுமில்லை. அவைகளையும் உங்கள் பரமபிதா பிழைப்பூட்டுகிறார் அவைகளைப்பார்க்கிலும் நீங்கள் விசேஷித்தவர்கள் அல்லவா? என்று கர்த்தராகிய இயேசு கூறினார். அதனால் அவைகள் தாங்கள் கூடு கட்டுவதை நிறுத்திவிடுவதில்லை, தங்கள் குஞ்சுகளுக்கு இரை தேடுவதற்காக கவலை அடைவதில்லை. தங்கள் கடமைகளை செய்யாமல் அவற்றை அலட்சியமாக தேவன் மேல் போட்டுவிடுகின்றவர்கள் சோம்பேறிகளாக இருக்கின்றார்கள். சோம்பேறியே, நீ எறும்பினிடத்தில்போய், அதின் வழிகளைப் பார்த்து, ஞானத்தைக் கற்றுக்கொள். அதற்குப் பிரபுவும், தலைவனும், அதிகாரியும் இல்லாதிருந்தும், கோடைகாலத்தில் தனக்கு ஆகாரத்தைச் சம்பாதித்து, அறுப்புக்காலத்தில் தனக்குத் தானியத்தைச் சேர்த்துவைக்கும் என நீதிமொழிகளின் புத்தகத்திலே வாசிக்கின்றோம். நான் எல்லாம் செய்து முடிப்பேன் என்று பிரயாசப்படக்கூடாது, மாறாக என்னை பெலப்படுத்தும் இயேசு கிறிஸ்துவினால் எதையும் செய்ய எனக்கு ஆற்றல் உண்டு என்று சொல்லி நாங்கள் பிரயாசப்பட வேண்டும். நாங்கள் வாழும் வழியை காட்டும் தேவன் ஒரு போதும் எங்களை மறந்து போகமாட்டார், அதே போல நாங்களும் அவருடைய பிரமாணங்களை மறந்து போகாமல், அவர் எங்களுக்கு கற்பித்தபடி எங்கள் வாழ்க்கையை நாங்கள் நடத்துவோம்.

**ஜெபம்:** இரக்கமுள்ள பிதாவே, நீர் எனக்கு கற்பித்த பிரமாணங்களை என் இருதயத்தில் வைத்து அதன்படி கிறிஸ்து இயேசுவுக்குள் பிரயாசப்பட எனக்கு உணர்வுள்ள இருதயத்தைத் தருவீராக. இரட்சகர் இயேசு கிறிஸ்து வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்!

# வைராக்கியமும் மனத் தாழ்மையும்

**நீதிமொழிகள் 11:2**
**அகந்தை வந்தால் இலச்சையும் வரும் தாழ்ந்த சிந்தையுள்ளவர்களிடத்தில் ஞானம் உண்டு.**

தேவனுக்கு பயந்து தன் வாழ்க்கையை நடத்தும் போதகர் ஒருவர், ஊழியத்திற்கு மிகவும் உறுதுணையாக இருந்து வந்த ஒரு உதவி ஊழியர், தேவ பிரமாணங்களுக்கு அப்பாற்பட்ட செயல் ஒன்றிலே ஈடுபடுவதை, தேவன் தாமே இந்த போதகருக்கு உணர்த்தினார். சங்கடமான நிலைமை! ஆனால் அந்த போதகர் தேவனைக் குறித்த வைராக்கியமுடையவராக இருந்தபடியால், வேத பிரமாணங்களுக்கு இணங்க, அந்த செயலை அந்த உதவி ஊழியருக்கு சுட்டிக் காட்டினார். அந்த உதவி ஊழியர் இதனால் போதகருடன் சற்று கசப்படைந்தார். நாட்கள் சென்ற போது, இன்னுமொரு விடயத்திலே போதகர், தன்னை அறியாமல் அந்த உதவி ஊழியருக்கு எதிராக ஒரு குற்றத்தை செய்துவிட்டதை தேவன் உணர்த்தினார். உறவு சற்று கசப்பாக இருந்தாலும், தன் பிழையை மறைக்காமல், உடனடியாக தன்னை தாழ்த்தி அந்த உதவி ஊழியரிடம் சென்று தான் செய்த சிறிய குற்றத்திற்காக மன்னிப்புக் கேட்டுக் கொண்டார். பிரியமானவர்களே, ஒரு மனிதனுக்கு தேவனைக் குறித்த வைராக்கியம் இருக்கும் என்றால், அந்த மனிதனிடம் பெருமை சற்றும் இருக்காது. ஏனெனில் எங்கள் தேவனுக்கும், பெருமைக்கும் எந்த சம்பந்தமும் கிடையாது. உண்மையாக தேவ காரியங்களில் வைராக்கியமுள்ள மனிதனின் வாழ்க்கையில் அந்த போதகரைப்போல மனத்தாழ்மை இருக்கும். தேவ சித்தத்தை எங்கள் வாழ்வில் நாங்கள் நிறைவேற்ற வேண்டுமாயின், அவருடைய சத்தத்திற்கு நாங்கள் கீழ்ப்படிய வேண்டும். அவருடைய சத்தம் நீதியுள்ளது, அந்த சத்தம் நாங்கள் குற்றம் செய்யும் போது அதை எங்களுக்கு உணர்த்தும். அந்த வேளையிலே நாங்கள் எங்களைத் தாழ்த்தி அந்த சத்தத்திற்கு கீழ்படிய வேண்டும்.

**ஜெபம்:** பரலோக தகப்பனே, என் வாழ்வில் எந்தக் காரியத்தைக் குறித்தும் பெருமை கொள்ளாமல், மன தாழ்மையுடன் உம்முடைய சத்தத்திற்கு எப்போதும் கீழ்ப்படிந்திருக்க எனக்கு பெலன் தாரும். இரட்சகராகிய இயேசு வழியாக வேண்டுகின்றேன். ஆமேன்!

# எடுத்துக்காட்டான வாழ்க்கை

**எபேசியர் 6:4**
**பிதாக்களே, நீங்களும் உங்கள் பிள்ளைகளைக் கோபப்படுத்தாமல், கர்த்தருக்கேற்ற சிட்சையிலும் போதனையிலும் அவர்களை வளர்ப்பீர்களாக.**

பிள்ளைகள் இந்த பூமியிலே சீரும் சிறப்புடன் வாழ வேண்டும் என்பது பெற்றோரின் விருப்பம். இதனால் பிள்ளைகள் தவறும்போது அவர்களை அவ்வப்போது சிட்சிக்கின்றோம் என்று பெற்றோர்கள் கூறிக்கொள்வார்கள். அது மாத்திரமல்ல, கல்வி மற்றும், விளையாட்டு துறை, இதர கலைகளை பிள்ளைகள் கற்றுத் தேற வேண்டும் என்று அதற்காக அதிகமாக பிரயாசப்படுகின்றார்கள். பெற்றோர்கள், இவை யாவற்றையும் நல்ல எண்ணத்துடனேயே செய்து வருகின்றார்கள். பிள்ளைகள் தங்கள் சொந்த, தந்தையையும் தாயையும் கனம் பண்ணி வாழும் போது, பெரிதான ஆசீர்வாதங்களை சுதந்தரித்துக் கொள்கின் றார்கள். பிள்ளைகளே, உங்கள் பெற்றோருக்குக் கர்த்தருக்குள் கீழ்ப் படியுங்கள், இது நியாயம். உனக்கு நன்மை உண்டாயிருப்பதற்கும், பூமியிலே வாழ்நாள் நீடித்திருப்பதற்கும், . உன் தகப்பனையும் உன் தாயையும் கனம்பண்ணுவாயாக என்பதே வாக்குத்தத்தமுள்ள முத லாங் கற்பனையாயிருக்கிறது என்று எழுதப்பட்டிருக்கின்றது. அதே நேரத்தில், பெற்றோர்களும் தங்கள் பிள்ளைகளை கோபமூட்டாமல் இருக்கும்படி வேதம் அறிவுரை கூறுகின்றது. “என் மகனே, உன் தகப்பன் கற்பனையைக் காத்துக்கொள் உன் தாயின் போதகத்தைத் தள்ளாதே.” என்று பிள்ளைகளுக்கு அறிவுரை கூறும் வசனத்தை பரிசுத்த வேதாகமத்தில் வாசிக்கின்றோம். பிள்ளைகள் தயங்காமல் திறந்த மனதுடன் தங்கள் பெற்றோரிடம் வந்து அவர்களின் சந்தேகங்களையும், அவர்கள் எதிர் நோக்கும் பிரச்சனைகளையும் சொல்லத் தக்கதான சூழ்நிலைகளை பெற்றோர் ஏற்படுத்த வேண்டும். முக்கியமாக, பிள்ளைகள் பெற்றோரின் போதகத்தை கேட்கும்படியாக, பெற்றோரின் வாழ்க்கை எடுத்துக் காட்டாகவும், தாங்கள் தங்கள் பிள்ளைகளுக்கு போதிக்கும் போதகத்தை தங்கள் வாழ்க்கையில் கைகொள்ளுகின்றவர்களாகவும் வாழ வேண்டும்.

**ஜெபம்:** அன்புள்ள பிதாவே, என்னுடைய நடக்கை மற்றவர்களுக்கு எடுத்துக் காட்டாகவும், என்னுடைய வாழ்க்கை முறை மற்றவர்களுக்கு நல் போதகமாகவும் விளங்கும் வாழ்க்கை வாழ கிருபை செய்வீராக. இரட்சகராகிய இயேசு கிறிஸ்து வழியாக வேண்டுகிறேன் ஆமேன்!

# அறுவடையின் நாட்கள்...

**நீதிமொழிகள் 10:5**
**கோடைகாலத்தில் சேர்க்கிறவன் புத்தியுள்ள மகன் அறுப்புக்காலத்தில் தூங்குகிறவனோ இலச்சையை உண்டாக்குகிற மகன்.**

வட துருவத்திற்கு அருகிலுள்ள நாடுகளில் இளவேனிற்காலம், கோடைகாலம், இலை உதிர்காலம், பனிக்காலம் என நான்கு காலங்களையும் மிக பிரதியட்சமாய் காணமுடியும். கோடைக் காலம் ஒரு சில மாதங்களே நிலவுவதால், குளிர் நாட்களும், உறைபனி நாட்களும் வரும்முன் வீட்டுக்கு வெளியே செய்யவேண்டிய வேலைகளையும், மேலும் அந்த குறுகிய நாட்களிலே விதைவிதைத்து சேகரிக்க வேண்டிய தானியங்களையும் மனிதர்கள் துரிதமாக செய்து கொள்வார்கள். இப்படியாக எறும்பும் ஞானமுள்ளதாய் கோடைகாலத்தில் செயற்படுகின்றது என முன்னைய தியானக் குறிப்பில் பார்த்தோம். தேவன் தாமே ஒரு தனித்துலமான நோக்கத்தோடே எங்களை அழைத்தார். அவர் அழைத்த நோக்கம் எங்களில் நிறைவேறும்படியாய் நாங்கள் உணர்வடைய வேண்டும். நாட்கள் துரிதமாய் கொடியதாய் மாறிக் கொண்டிருக்கின்ற காலம் இது. நாங்கள் இந்த உலகத்திலே நீடுழியாய் வாழப் போவதில்லை. எங்களுடைய நாட்கள் இந்த உலகத்திலே குறிக்கப்பட்டிருக்கின்றது. எனவே தரப்பட்டுள்ள நாட்களை ஞானமாக ஆதாயப்படுத்திக் கொள்ள வேண்டும். கோடைகாலத்திலே சேர்த்து வைக்கின்றவர்கள் போல, நாங்கள் தேவனுடைய ராஜ்யத்திற்குரிய காரியங்களில் அதிகமாக செயற்பட வேண்டும். இருள் சூழும் காலம் வருமுன், கிடைக்கின்ற சந்தர்ப்பங்களில் மீட்பின் நற்செய்தியை மற்றவர்களுக்கு அறிவிக்க வேண்டும். அறுப்புக்காலத்தில் தூங்குகிற இலச்சையை உண்டாக்குகின்ற மனிதர்களைப் போல இருக்காமல், அறுவடையின் நாட்களாகிய இந்த நாட்களில் உற்சாகத்துடன் செயற்படுவோம். இந்த உலகத்திலே மாயைக்கு பின்பாக சென்று அழிந்து போகின்ற ஆத்துமாக்களைக் குறித்த பாரம் எங்கள் உள்ளத்தில் இருக்க வேண்டும்.

**ஜெபம்:** பரிசுத்த பிதாவே, கிருபையின் நாட்களை ஆதாயப்படுத்திக்கொள்ளவும், இந்த பூமியிலே இருக்கும் நாட்களை விரயம் செய்யாத படிக்கும், ஞானமுள்ள இருதயத்தைத் தாரும். இரட்சகர் இயேசு கிறிஸ்து வழியாக ஜெபிக்கின்றேன். ஆமேன்!

# உத்தம மார்க்கத்தான்

**சங்கீதம் 34:15**
**கர்த்தருடைய கண்கள் நீதிமான்கள்மேல் நோக்கமாயிருக் கிறது.**

தேவ கற்பனைகளின்படி செம்மையான வழியிலே நடக்கின்ற ஒரு உத்தம மனிதனுக்கு எதிராக அவதூறான பேச்சுக்களை ஒரு அயலவன் பேசித்திரிந்தான். அயலவன் பேசும் வார்த்தை பொய் என்று அந்த மனிதன் எடுத்துக் கூறியபோதும், அந்த உத்தமனின் பேச்சை நம்பாமல், சமுதாயத்திலுள்ள அநேகமானோர் அந்த அயல வனை நம்பினார்கள். ஆரம்பத்திலே துக்கமடைந்த அந்த மனிதன், பின்பு அந்த பாரத்தை முற்றாக தேவனுடைய பாதத்திலே வைத்து ஜெபம் செய்தான். பல ஆண்டுகள் சென்றபின், அந்த அயலவனுக்கு புத்தி தெளிந்த போது, தான் செய்த பாரதூரமான செயல்களைக் குறித்து, பொது மன்னிப்பு கேட்டுக் கொண்டான். பிரியமானவர்களே, அவன் மன்னிப்பு கேட்டுக் கொண்டதினால் யாருக்கு நன்மை? அந்த அயலவனுக்கா அல்லது உத்தம மனிதனுக்கா? உத்தம மார்க்கத்தான் எப்போதும் நன்மையை கண்டவனாகவே வாழ்ந்து வந்தான். தன்னைப் பற்றி வீண் பேச்சை மனிதர்கள் பேசிய போதும், அந்த சேறும் சகதியுமான பேச்சுக்குள் சிக்கி தன் பரலோக தேவனை மறந்து விடாமல், அந்த அவதூறுகளை தாண்டி வளர்ந்து விட்டான். ஆனால் அந்த அயலனவனோ, அந்த வீண்பேச்சை தன் மனதில் வைத்த வனாக, தீமையை பற்றிக் கொண்டு வாழ்ந்து வந்தான். அவன் தன் தவறை உணர்ந்து கொண்டது அவனுடைய ஆத்துமாவிற்கு நடந்த பெரிய நன்மை. கர்த்தராகிய இயேசு இந்த உலகத்திலே ஊழியம் செய்த போது, பிரபல்யமான ஆசாரியர்கள், வேத வல்லுனர்கள் இயேசுவுக்கு எதிரான பல பேச்சுக்களை பேசினார்கள். ஆனால் இயேசுவோ அவற்றை தாண்டி, தன்னை அனுப்பின பிதாவின் சித்தத்தையே நிறைவேற்றுகிறவராக இருந்தார். அந்த பிரபல்யமான மனிதர்களின் அறியாமையை மன்னித்தார். அதே போல, மனிதர்கள் காரணமில்லாமல் எங்களை தூற்றி திரியும் போது, சற்றும் கவலை யடையாமல், இயேசு செய்தது போல, அவர்களை உடனடியாக மன்னித்து அந்த சேற்றையும் சகதியையும் உள்ளத்திலே ஏற்றுக் கொள்ளாமல், உதறித் தள்ளிவிடுங்கள்.

**ஜெபம்:** அன்பான பிதாவே, நான் எப்போதும் உமக்கு முன்பாக உத்தமனாய் வாழ என்னை வழி நடத்திச் செல்லும். இரட்சகராகிய இயேசு வழியாக ஜெபிக்கின்றேன். ஆமேன்!

# உலகமும் அதன் ராஜ்யங்களும்...

**சங்கீதம் 22:28**
**ராஜ்யம் கர்த்தருடையது் அவர் ஜாதிகளை ஆளுகிறவர்.**

உலகிலே, நாடுகளிலே, அதின் அரசாங்கங்களிலே என்ன நடக்கின்றது என அறியும் ஆவலுடன், பலர் பத்திரிகைகளை வாசிப்பதை காண்கின்றோம். உலகிலே என்ன நடக்கின்றது என அறிந்து கொள்வது நல்லது. எனினும் தேவனை அறியாமல் எந்த காரியங்களும் நடைபெறுவதில்லை என்பதை மறந்துவிடக் கூடாது. ராஜாக்கள் அரசாண்ட நாட்களிலே உலக அரசாங்கங்கள் எப்படி இருந்தது என பரிசுத்த வேதாகமத்தில் வாசிக்கின்றோம். அது மாத்திரம் அல்ல இந்நாட்களிலும் இனி வரப்போகும் நாட்களிலும் இருக்கும் ராஜ்யங்கள் எப்படிப்பட்டதாக இருக்கும் எனவும் வேதாகமத்திலே முன்னறிவிக்கப்பட்டிருக்கின்றது. பண்டைய நாட்களில், தேவ பிரமாணங்களை அற்பமாக எண்ணி செயற்பட்ட ராஜ்யங்கள் இருந்தன. தேவனுடைய வழிகள் அவர்களுக்கு அற்பமாக தோன்றின. எலியா என்னும் தீர்க்கதரிசியின் நாட்களிலே, எலியாவை தவிர, தேவனுக்கு பிரியமாக வாழ்ந்தவர்கள் 7000 பேர்கள் மட்டுமே. மிகுதியானோர், தேவனுடைய வழிகளை விட்டு இந்த உலகம் போகும் போக்கிற்கு இடங் கொடுத்திருந்தார்கள். தேவனுக்கு விரோதமானவர்கள் பெருகியிருந்தார்கள் ஆனாலும் எலியா என்ற தேவனுடைய தீர்க்கதரிசி ஒருவனாலே மட்டுமே தேசத்தில் நடக்க வேண்டிய காரியங்கள் நியமிக்கப்பட்டிருந்தது. இந்த நாட்களிலே தேவனுடைய ஜனங்களை உலகில் வாழ்வோரும், தேவனை நம்பாதோரும் அற்பமாக எண்ணலாம், தேவனுடைய ஆளுகையை மறந்து, தேசங்களின் அரசாங்கங்களை உயர்த்தியோ அல்லது தாழ்த்தியோ பேசலாம். ஆனால் ஆளுகை கர்த்தருடையது. அவர் வார்த்தையினால் வானத்தையும், பூமியையும், அதிலுள்ளவைகள் யாவற்றையும் உருவாக்கினார். எனவே இந்த உலகம் எந்த செய்தியையும் கூறினாலும் எங்கள் வாழ்க்கையின் கருப்பொருளை மறந்து, விசுவாசத்திற்கெதிரான வார்த்தைகளை பேசாதபடி, தேவ சித்தம் உலகிலே நிறைவேற பிரார்த்திப்போம்.

**ஜெபம்:** அன்புள்ள பிதாவே, இந்த உகல பிரமாணங்களுக்கு அடிமைப்பட்டு போகதபடி விழிப்புடன் உம்முடைய பாதத்தில் தேசங்களுக்காக ஜெபிக்கும் உள்ளத்தைத் தாரும். இரட்சகராகிய இயேசு வழியாக வேண்டுகின்றேன். ஆமேன்!

# உண்மையுள்ள இருதயம்

**எபிரெயர் 3:12**
**சகோதரரே, ஜீவனுள்ள தேவனைவிட்டு விலகுவதற்கேதுவான அவிசுவாசமுள்ள பொல்லாத இருதயம் உங்களிலொருவனுக்குள்ளும் இராதபடிக்கு நீங்கள் எச்சரிக்கையாயிருங்கள்.**

பண்டைய எகிப்து ராஜ்யத்தை அரசாண்ட பார்வோன் என்பவன் இஸ்ரவேல் ஜனங்களை அடிமைகளாக வைத்திருந்தான். அடிமைத்தனத்திலிருந்த இந்த ஜனங்களை வழிநடத்தும்படி மோசே என்பவனை தேவன் தெரிந்தெடுத்தார். அந்த ஜனங்களை பாலைவனத்தினூடாக தேவன் வாக்களித்த செழிப்புள்ள கானான் தேசத்திற்கு வழி நடத்திச் சென்றான். இந்த ஊழியமானது மோசேக்கு இலவாக இருக்கவில்லை. பல சவால்கள், எதிர்ப்புக்கள், கடினமாக சூழ்நிலைகள் மத்தியில் தேவனுடைய சித்தம் நிறைவேறும்வரை அவன் பொறுமையுள்ளவனாக இருக்க வேண்டியதாயிருந்தது. ஆனாலும் மோசே தேவனுடைய வீட்டில் எங்கும் உண்மையுள்ளவனாக இருந்தான். அதே போல, தேவ குமாரனாகிய எங்கள் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து பல எதிர்ப்புக்கள் மத்தியில் மரணம் வரை தம்மை ஏற்படுத்தினவராகிய பிதாவாகிய தேவனுக்கு உண்மையுள்ளவராயிருக்கிறார். பிதாவாகிய தேவன் தாமே எங்களை தம்முடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்து வழியாக தம்முடைய நித்தியமான பரலோக ராஜ்யத்திற்கு பங்காளிகளாக இருக்கும்படி அழைத்தார். அந்த இலக்கை நாங்கள் அடையும்வரை கொஞ்சக் காலம் இந்தப் பூமியிலே இருக்க வேண்டியதாயிற்று. குறித்த காலம் நிறைவேறும் வரைக்கும், இந்த பூமியிலே நாங்கள் நிறைவேற்றும்படி தேவனால் நியமிக்கப்பட்ட திட்டத்தை எங்கள் வாழ்வில் நிறைவேற்ற வேண்டும். பல பாடுகள் சோதனைகள், எதிர்ப்புக்கள், ஏளனங்கள் வரும், அவை எல்லாவற்றின் மத்தியிலும் நாங்கள் மோசே என்னும் தேவ மனிதனைப் போல, கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவைப் போல நாங்கள் உண்மையுள்ளவர்களாக இருக்க வேண்டும்.

**ஜெபம்:** இரக்கமுள்ள தகப்பனே, எங்கள் கர்த்தராகிய இயேசுவை போல நாங்கள் உண்மையுள்ளவர்களாக வாழ வேண்டும். உம்மைவிட்டு தூரம் போகும் வஞ்சகமான இருதயத்தை எங்களை விட்டு அகற்றிவிடுவீராக. இரட்சகராகிய இயேசு வழியாக வேண்டுகிறேன். ஆமேன்!

# ஆவிக்குரிய கண்கள்

**1 கொரிந்தியர் 2:12**

**நாங்களோ உலகத்தின் ஆவியைப்பெறாமல், தேவனால் எங்களுக்கு அருளப்பட்டவைகளை அறியும்படிக்கு தேவனிலிருந்து புறப்படுகிற ஆவியையே பெற்றோம்.**

மாம்ச கண்கள் என்பது இந்த உலக போக்கிற்கு அடிமைப்பட்ட மனக் கண்கள். ஆவிக்குரிய கண்கள் என்பது இந்த உலக போக்கிற்கு அடிமைப்படாததும், தூய ஆவியினாலே புதிதாக்கப்பட்ட பிரகாசமுள்ள மனக் கண்கள். இந்த உலக போக்கிற்கு நாங்கள் அடிமைப்படும் போது, எங்கள் மனக் கண்கள் குருடுபடுவதால், நாங்கள் யாரைப் பார்த்தாலும், எதைப் பார்த்தாலும், எதைக் கேட்டாலும் அதில் குறைகள் குற்றங்களை தேடுபவர்களாக இருப்போம். ஆனால் ஆவிக்குரிய பிரகாசமுள்ள மனக் கண்களை உடையவர்கள், கர்த்தராகிய இயேசு எப்படி மற்றவர்களை பார்த்தாரோ அப்படியே அவர்களும் பார்ப்பார்கள். இயேசு இந்த உலகத்திலே இருந்த நாட்களிலே, பாவத்திற்கு அடிமைப்பட்ட, சமுதாயத்தால் தள்ளிவிடப்பட்ட அநேகர் அவரைத் தேடி வந்தார்கள். அந்த நாட்களிலே இருந்த சில வேத வல்லுனர்கள், ஆசாரியர்கள் மற்றும் பரிசேயர் எனப்பட்ட பிரிவினருக்கு, அந்த பாவிகளின் பாவங்களே கண்முன்னாக தெரிந்தது. ஆனால் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவுக்கோ, அந்த பாவிகளான மனிதர்கள் விடுதலையை தேடியும் கண்டடையமுடியாமல் பதைக்கும் அவர்களின் ஆத்துமாக்களே தெரிந்தது. அந்த ஆத்துமாக்கள் எரி நரகத்திற்கு போகாமல் பரலோகம் செல்லும்படியாகவே இயேசு இந்த பூமிக்கு மனித உரு எடுத்து வந்தார். பிரியமானவர்களே, மாம்ச கண்களால் பார்க்கும் பார்வை வேண்டாம். பிரகாசமுள்ள மனக்கண்களை தேவன் தம்முடைய பிள்ளைகளுக்கு தந்திருக்கின்றார். எனவே அதை குருடுபடுத்திவிடாதபடிக்கு எங்கள் செய்கைகளை காத்துக் கொள்ள வேண்டும். நாங்கள் வேறுபிரிக்கப்பட்டவர்கள் என இறுமாப்புக் கொள்ளாதபடி, எங்களைத் தாழ்த்தி மற்றவர்களுக்காக வேண்டுதல் செய்வோம்.

**ஜெபம்:** இரக்கமுள்ள தகப்பனே, மாம்சசிந்தை மரணம் ஆவியின் சிந்தையோ ஜீவனும் சமாதானமுமாம். எனவே உம்முடைய தூய ஆவியின் வழிநடத்தலுக்கு எப்போதும் கீழ்ப்படிந்திருக்க உதவி செய்வீராக. இரட்சகராகிய இயேசு வழியாக வேண்டுகிறேன். ஆமேன்!

# அசட்டையாக விட்டுவிடாதிருங்கள்

**நீதிமொழிகள் 15:22**
**ஆலோசனையில்லாமையால் எண்ணங்கள் சித்தியாமற்போம் ஆலோசனைக்காரர் அநேகர் இருந்தால் அவைகள் உறுதிப்படும்.**

ஒரு வாலிபனுக்கு, வாலிப பிரயாயத்திலிருந்து, அவன் வயிற்றில் சாடையான எரிவு அவ்வப்போது ஏற்படுவதுண்டு. சில ஆண்டுகள் கடந்து சென்றபின்பு அந்த எரிவு சற்று அதிகரிக்க ஆரம்பித்தது. இவனுடைய சரீரத்தில் பெலன் அதிகமாக இருந்ததால், அதை தாங்கிக் கொள்வது சிரமமாக இருக்கவில்லை. அதை குறித்து வைத்திய ஆலோசனையையோ, அல்லது மூத்தவர்களின் வழிநடத்தலையோ பெறாமல் பாராமுகமாக விட்டுவிட்டான். பல வருடங்கள் சென்ற பின்பு, அவனுடைய சரீரத்திலே பெலன் குறைய ஆரம்பிக்கும் போது, அந்த வயிற்று எரிவும் அதிகமாகினதால், அதை அவன் தாங்கி கொள்ள முடியவில்லை, பல வகையான உணவு பதார்த்தங்களை உண்ண முடியவில்லை, சரியாக தூங்க முடியவில்லை. இப்போது வைத்திய உதவியை நாட வேண்டிய கட்டாயம் வந்து விட்டது. ஆனால் வைத்தியர்கள் தாங்கள் சோதனையை நடத்திய போது, அந்த நோய், மாற்றக் கூடியதாக இருந்தாலும், வலு சிக்கலான நிலையை அடைந்து விட்டது என்றார்கள். பிரியமானவர்களே, இதற்கு ஒத்ததாகத்தான் எங்கள் ஆவிக்குரிய வாழ்க்கையும் இருக்கின்றது. சின்னச் சின்ன விடயங்கள், ஆரம்பத்தில் கட்டுபாட்டுக்குள் இருப்பதைப் போல தோன்றலாம், ஆனால் நாளாந்தம் அந்த சின்ன விடயங்கள் வளர்ச்சியடைய ஆரம்பிக்கும், காலப்போக்கில் அவை எங்களில் உள்ள மற்ற நன்மைகளை படிப்படியாக அழிக்க ஆரம்பிக்கும். எனவே உங்களுக்கு பிரச்சனைகள் ஆரம்பிக்கும் போதே நல்ல ஆலோசனை கூறுபவர்களை நாடுங்கள். அப்படி உங்களுக்கு நம்பிக்கையானவர்கள் இல்லை என்றால், தேவனுடைய பாதத்திலே வைத்து ஊக்கமாக ஜெபம் செய்யுங்கள். அவர் உங்களை வழிநடத்துவார். தேவனுடைய வழிகள் ஆச்சரியமானவைகள், அதை ஏற்றுக் கொள்ளக்கூடிய மனநிலையுடையவர்களாக இருங்கள். சில வேளைகளில் சின்ன பிள்ளைகள் ஊடாக தேவன் பேசுவார். சில வேலைகளில் அறியாத வழியில் ஒருவரை உங்களிடத்தில் அனுப்புவார். வேத வார்த்தைகள் ஊடாகவும், மற்றும் சொற்பனங்கள் ஊடாகவும் பேசுவார்.

**ஜெபம்:** அன்புள்ள பிதாவே, உமது பிரமாணங்களுக்கு எதிரான எந்த சின்ன விடயங்களையும் நான் பாராமுகமாக விட்டுவிடாதபடிக்கு எனக்கு ஆலோசனை தந்து நடத்தும். இரட்சகர் இயேசு கிறிஸ்து வழியாக ஜெபிக்கிறேன். ஆமேன்

# தேவ அன்பை வெளிக்காட்டுங்கள்

**யாக்கோபு 2:8**
**உன்னிடத்தில் நீ அன்புகூருகிறதுபோலப் பிறனிடத்திலும் அன்புகூருவாயாக என்று வேதவாக்கியம் சொல்லுகிற ராஜரீக பிரமாணத்தை நீங்கள் நிறைவேற்றினால் நன்மைசெய்வீர்கள்.**

நான் இயேசுவை நேசிக்கின்றேன் என்று ஒருவர் கூறிக்கொண்டார். ஆனால் அவரால் சக விசுவாசிகளில் சிலரையும், மற்றும் சில அயல வர்களையும் காணும் போது அவர் உள்ளத்தில் எழும் சீற்றம், அவர் முகத்தில் தெளிவாகத் தெரிந்தது. நான் இயேசுவை உண்மையாக நேசிப்பேனாக இருந்தால், என் அயலவரை, சொந்த பந்தங்களை, சக விசுவாசிகளை நிச்சயமாக அன்பு செய்பவனாக இருப்பேன். சில வேளைகளிலே, நாங்கள் சொந்த பந்தங்களுடன், அயலவருடன், சக விசுவாசிகளுடன் சமாதானமாக இருக்க நாடித் தேடும் போதும், அவர்கள் அதை ஒருவேளை உதறித்தள்ளலாம். அந்த வேளைகளி லும், என் கடமை முடிந்து விட்டது என சொல்லி தட்டிக் கழிக்காமல் இருக்க வேண்டும். அவர்களை குறித்து எந்த கசப்பையும் உள்ளத் தில் வளர விடக்கூடாது. அவர்களுக்காக ஜெபம் செய்ய வேண்டும். நாங்கள் அவர்களுக்கு எதிராக குற்றங்கள் செய்திருந்தால், கர்த்தரு க்குள் எங்களைத் தாழ்த்தி அவர்களிடம் மன்னிப்புக் கேட்டுக் கொள்ள வேண்டும். வேத பிரமாணங்களுக்கு அடுத்த விடயங்களை நீங்கள் தவிர்த்துக் கொள்ளும் போது, உங்கள் சொந்த பந்தங்களோ, அயல வரோ அல்லது சக விசுவாசிகளும் கூடவே, உங்களை புறக்கணி த்தால், நீங்கள் அவர் மனக்கண்கள் பிரகாசமடையும்படி ஜெபம் செய் யுங்கள். அவர்கள் இருதயக் கடினத்தை தேவன் மாற்றிப் போடுவார். சில வேளைகளிலே, நாங்கள் அறியாதவர்கள், கேள்விப்படாதவர்கள், துன்மார்க்கத்தில் வாழ்பவர்களுக்காக அதிகமாக பரிந்து பேசி ஜெபம் செய்கின்றோம். ஆனால் எங்களுக்கு அருகில் உள்ளவர்களின் விடய த்தில் பொறுமையை இழந்து விடுகின்றோம். அப்படியிருக்கலா காது, கண் கண்ட சகோதரர்களை அன்பு செய்ய முடியாது போனால், தூரத்திலுள்ளவர்களுக்கு நாங்கள் செய்யும் உதவி எப்படி ப்பட்டதாயிருக்கும்? அன்பு நிறைந்ததாக இருக்குமோ? என சிந்தித்துப் பாருங்கள்.

**ஜெபம்:** பரிசுத்த பிதாவே, எங்களுக்கு அருகில் வாழ்கின்ற வர்களை நாங்கள் நேசிக்க, அவர்களுக்காக ஜெபிக்க எங்கள் உள்ளங்களை உணர்வுள்ளதாக்கும். இரட்சகராகிய இயேசு வழியாக வேண்டுகின்றேன். ஆமேன்!

# படைத்தவரை நாடித் தேடுங்கள்!

**ஏரேமியா 29:13**
**உங்கள் முழு இருதயத்தோடும் என்னைத் தேடினீர்களானால், என்னைத் தேடுகையில் கண்டுபிடிப்பீர்கள்.**

வீட்டிலே செய்ய வேண்டிய வேலைகள் யாவையும் அவசரஅவசரமாக குறித்த நேரத்திற்குள் முடித்து, மாலையிலே தொலைக் காட்சியில் ஒளிபரப்பப்படும் நாடகத்தொடரை பார்ப்பதற்காக அமர்ந்து கொண்டார் தாயார். எங்கள் இதயம் எதிலே ஆர்வமாக இருக்கின் றதோ அதை நிறைவேற்றும்படியாய் செய்ய வேண்டிய காரியங்களை தீவிரமாக செய்து முடிப்போம். "அப்பா உம்மை நேசிக்கின்றேன், ஆர் வமுடன் நேசிக்கின்றேன்" என்று ஒரு கிறிஸ்தவ பாடலின் வரிகள் அழகாக அமைக்கப்பட்டுள்ளது. நாங்கள் எங்கள் பிதாவாகிய தேவனை அப்பா பிதாவே என்று அழைக்கக்கூடிய சிலாக்கியத்தைப் பெற்றிருக்கின்றோம். எங்களுக்கு பிடித்த ஒருவரை பற்றி அதிகமாக அறிவதையும், அவரைப் பற்றி அதிகமாக பேசுவதையும் விரும் புவோம். அவரை சந்திக்க சந்தர்ப்பம் கிடைத்தால் அவருடன் உரை யாட மிகவும் வாஞ்சையுள்ளவர்களாக இருப்போம். இன்று நீங்கள் யாரை அல்லது என்னத்தை ஆர்வமுடன் உங்கள் வாழ்க்கையில் நாடித் தேடுகின்றீர்கள்? சில பெண்களுடைய வாழ்க்கையிலே "கல்லானாலும் கணவன் புல்லானாலும் புருஷன்" என்று கணவனு க்குரிய கடமைகளை நிறைவேற்றுவார்கள். ஆனால் சில பெண்கள் அதை அன்புடன் கூட்டி வழங்குகின்றார்கள். அதே போல சில ஆண் களும் தங்கள் மனைவியை குறித்த கடமைகளை மட்டும் செய்யாமல், அவர்களை உண்மையாக நேசிக்கின்றார்கள். பிரியமானவர்களே, இந் தப் பிரகாரமாக, காலை எழுந்தவுடன், உங்கள் வேலைகளை தொடங் கமுன், எங்களை நேசிக்கின்ற எங்கள் பிதாவகிய தேவனை தொழுது கொள்ளுங்கள். கடமைக்காக அல்ல, அவரை ஆர்வமுடன் நாடுங்கள்! நீங்கள் வாஞ்சையோடு தேடினால் நிச்சயமாக கண்டடைவீர்கள். அப்படிச் செய்தால் உங்கள் வாழ்க்கையில் சமாதானம் பெருகும்.

**ஜெபம்:** எங்களை நேசிக்கின்ற அப்பா பிதாவே, கடமைக்காக அல்லது ஒரு பொறுப்பை நிறைவேற்றுமாப்போல் உம்மைத் தேடாமல், ஆர்வத்துடன் உம்மை நாடித் தேடும் இருதயத்தைத் தாரும். இரட்சகர் இயேசு வழியாக வேண்டுகிறேன். ஆமேன்!

# நிலையான ஐசுவரியம்..

**நீதிமொழிகள் 8:18**
**ஐசுவரியமும், கனமும், நிலையான பொருளும், நீதியும் என்னிடத்தில் உண்டு.**

இந்த பூமியிலே மனிதர்கள் பிரயாசப்படுகின்றார்கள். அவர்கள் வெவ்வேறான தொழித் துறைகளில் அமர்ந்திருந்தாலும் அவர்கள் அடிப்படை நோக்கம் தரமான வாழ்க்கை வாழ வேண்டும் என்பதாகும். அவர்கள் கூறும் தரமான வாழ்க்கை என்ன? அந்த தரத்தின் அடிப்படைக் காரணிகள்: உணவு, உடை, உறையுளில் தங்கியிருக்கின்றது. நல்ல வசதியான வீடு, தரமான உடைகள், ஆரோக்கியமான ஆகாரம், மற்றும் தரமான மோட்டார் வண்டி சமூகத்திலே அந்தஸ்து, பொழுதுபோக்கும் இதர நிகழ்ச்சிகள் இப்படியாக பட்டியல் நீண்டு கொண்டு போகின்றது. இவற்றுள் ஏறத்தாழ யாவற்றையும் பணத்தினால் பெற்றுக் கொள்ளலாம். இப்படியான வாழ்க்கையை சிலர் ஆசீர்வாதம் என வகையறுத்துக் கொள்கின்றார்கள். இவை யாவும் உங்களிடம் மிகையாக இருக்கின்றது என வைத்துக் கொள்வோம். ஆனால் நீங்கள் வசிக்கும் மாளிகைக்குள் உள்ள குடும்பத்தில் சமாதானம் இல்லை. நீங்கள் தரமான விலையுயர்ந்த ஆடைகளால் மூடியிருக்கும் சரீரத்திற்குள் இருக்கும் உள்ளான மனிதனில் திருப்தியில்லை. அப்படிப்பட்ட சமாதானம் இழந்த உலக ஐசுவரியமுள்ள வாழ்க்கையை ஆசீர்வாதம் என்று சொல்ல முடியாது. வானமும் பூமியும் அதிலுள்ள யாவும் அழிந்து போகும் என்றால், அதினால் வரும் ஐசுவரியம் நித்தியமானதல்ல. அழியாத நித்திய ஐசுவரியம் என்னிடம் உள்ளது என தேவனாகிய கர்த்தர் கூறுகின்றார். இவை யாவற்றையும் கடந்து, பரலோகத்திலுள்ள, நித்திய ஐசுவரியத்தின் நிச்சயத்தை, உங்கள் எளிமையான ஆத்துமாக்களிலே தேவன் உறுதிப்படுத்தியிருக்கின்றார். எங்கள் உடல் அழிந்து போகும் ஆனால் எங்கள் ஆத்துமா நித்தியமான பரலோக மேனியைத் தரித்து நீடூழியாய் பரலோகத்திலே சுகித்திருக்கும்.

**ஜெபம்:** அன்பின் தேவனே, அந்தகார கிரியைகளை பகுத்தறிந்து, அவைகளுக்கு என் வாழ்க்கையில் சற்றும் இடம் கொடுக்காதிருக்க கிருபை செய்யும். இரட்சகராகிய இயேசு வழியாக வேண்டுகின்றேன். ஆமேன்!

# அன்பான வாசகர்களுக்கு!

## உங்கள் ‘**உள்ளான மனிதன்**’ பிரதியை பெற்றுக் கொள்ளுங்கள்

உள்ளான மனிதன் சஞ்சிகையை ஒரு சபையினூடாக பெற்றிருந்தால், தொடர்ந்தும் மாதாந்த பிரதியை பெற்றுக்கொள்ள, அந்த சபையின் போதகரை தொடர்பு கொள்ளுங்கள். நீங்கள் வசிக்கும் இடத்தில் உள்ள சபையின் ஊடாக உள்ளான மனிதன் சஞ்சிகை விநியோகிக்கப்படாவிடின், அடுத்த பக்கத்திலுள்ள படிவத்தில் உங்கள் விபரங்களை பதிவு செய்து, கொழும்பில் இந்த சஞ்சிகையை அச்சிட்டு வெளியிடுகிறவர்களின் முகவரிக்கு அனுப்பி வையுங்கள்.

மாதாந்தம் இந்த சஞ்சிகையை வாசித்த பின்பு தேவனை அறியாதவர்களுடனும் இதனை பகிர்ந்து கொள்ளுங்கள். இரட்சிப்பு தேவனிடத்திலிருந்து வரும்!

**தேவன், தம்முடைய ஒரேபேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்திய ஜீவனை அடையும்படிக்கு, அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார்.** (யோவான் 3:16)

அந்த ஆச்சரியமான மாறாத தேவ அன்பு இன்றும் யாவரையும் இருளின் அதிகாரத்திலிருந்து ஆச்சரியமான தேவ ஒளிக்குள் வரும்படிய அழைக்கின்றது. ஆமென்!

**கிருபையின் கூடாரம் அப்போஸ்தல சபை**

ரொரன்ரோ, கனடா ☎ 416.613.2909

610281630V 0722231174

உள்ளான மனிதன் மாதாந்த பிரதி

# விண்ணப்பப் படிவம்

**முழுப் பெயர் FULL NAME:**

______________________________________________

______________________________________________

**முகவரி ADDRESS:**

(தபால் உங்கள் இருப்பிடத்திற்கு வந்தடைய தேவையான முழு முகவரி விபவரங்களையும் குறிப்பிடவும்)

______________________________________________

______________________________________________

______________________________________________

______________________________________________

(தொலை பேசி இலக்கம், மின் அஞ்சல் முகவரி உங்களிடம் இருந்தால் அவைகளை குறிப்பிடவும்)

**தொலைபேசி TELEPHONE:**

______________________________________________

**மின் அஞ்சல் E-MAIL:**

______________________________________________

**விண்ணப்பப் படிவம் அனுப்பப்பட வேண்டிய முகவரி**

K. Indrajit

72/6 Edirisinghe Road,

Mirihana, Nugegoda

MAIL THE APPLICATION FORM TO THE ABOVE MENTIONED ADDRESS

*FOR MORE INFO VISIT OUR WEBSITE*

**www.gtachurchnet.ca**

*Sunday Worship Service*
*at 10:00 AM*

*Sunday school (Ages 4 – 18)*
*at 9:00 AM*

*Tuesday Prayer and Worship*
*at 7:30 PM*

*Thursday Ladies Prayer*
*at 8:30AM*

*2nd & 4th Fridays*
*Deliverance Prayer at 7:00 PM*

*2nd Saturday*
*Fasting and Prayers at 10:00 AM*

210 SILVER STAR BLVD., UNIT 807, SCARBOROUGH, ON M1V 5J9

**www.gtachurchnet.ca** **416.613.2909**